கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
29-4-1973
30காசு



எங்கெங்கே பெட்ரோலியம் தயாரிப்புக்கள் தேவையோ அங்கெல்லாம் சேர்ப்பிக்கிறோம்


நாடு நெடுகப் பரவிய சேமிப்பு, விநியோகப் பணிகள் மூலம் இண்டியன் ஆயில், பெட்ரோலியம் தயாரிப்புக்களை இடையறாது சப்ளை செய்தவண்ணம், தேச சேவை புரிந்துவருகின்றது. 200க்கும் மேற்பட்ட நிர்மாணிப்புக்கள், மொத்தவாரி டெப்போக்கள், விமான எரிபொருள் நிலையங்கள், 3000க்கும் மேற்பட்ட பெட்ரோல்/டீசல் நிலையங்கள் ஆகியவற்றின் உதவியால், தங்கள் தயாரிப்புக்களை எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் சேர்ப்பித்துவருகின்றது இண்டியன் ஆயில். எல்லாவிதப் போக்குவரத்து சாதனங்களும் இதன் பொருட்டு ஈடுபடுத்தப் படுகின்றன— கரையப்புற டாங்கர்கள், பைப்லைன்கள், ரெயில் டாங்கு வாகனங்கள், டாங்கு டிரக்குகள், டாங்கு வண்டிகள் எல்லாமே.

1971-72லே இண்டியன் ஆயில் 140 லட்சம் கிலோலிட்டர் அளவுள்ள தயாரிப்புக்களை விற்பனைக்கு விடுத்துள்ளது—இதன் மூலம், நாட்டின் தேவையிலே ஏறக்குறைய 55 சதவிகித அளவை ஈடுசெய்து, நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கும், தேசப் பாதுகாப்புக்கும் அரும்பணி ஆற்றியுள்ளது.

INDIANOIL —பொருளாதார வளமைக்கான தேசியப் பொறுப்புறவு

இண்டியன் ஆயில் கார்பொரேஷன் லிமிடெட்.





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்

கோகுலம்

மலர் 2 :: இதழ் 2


ஏப்ரல் 29, 1973

பிரமாதீச, சித்திரை 17

சந்தா விவரம் :

தனிப் பிரதி விலை 30 காசு

ஒரு வருடம் ரூ. 7-00
ஆறு மாதம் ரூ. 3-50
வெளி நாடுகள் ரூ. 18-00





அட்டைப்படக் குழந்தைகள் :

"நல்ல காலம் ! கடல் காற்றுக்குக் 'கட்' ஏதும் வரல்லே !"

வண்ணப்படம் : வித்யாவ்ரதா



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

அக்ரூரர் வருகை

அக்ரூரர் என்ற உத்தமர் கம்சனுடைய கட்டளைப்படி மறுநாள் காலை தேரேறிக் கோகுலத்தை நாடிப் புறப்பட்டார். அவருடைய உள்ளத்திலே பரமபதியாகிய கண்ணபிரானைக் கண் குளிரத் தரிசிக்கப் போகிறோம் என்ற ஆனந்தக் கடல் கொந்தளித்தது. "என் மனமே! நீ முற்பிறப்பில் என்ன புண்ணியம் செய்தனையோ? எம்பிரானை நினைக்கின்றனையே. கண்ணன் கழலடியைக் காண்பதற்கு என் கண்களே! நீங்கள் என்ன தவம் செய்தீர்களோ! என் இரு கரங்களே! தேவருக்கும் வேதங்களுக்கும் எட்டாத எம்பெருமானுடைய பாதங்களைத் தொட்டுப் பணிவதற்கு நீங்கள் எத்தனை காலம் தவம் செய்தீர்களோ?

"ஆ! அரும் பெருந் தவம் செய்தாலும் காணக் கிடைக்காத ஈசனைக் கண்டு அழைத்து வா என்றானே? அந்தக் கம்சனுக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? ஆனால் அவன் நல்லெண்ணத்தோடு சொல்லவில்லை. அகிலலோகநாயகனைக் கொல்லுவதற்கு முயலுகின்றானே? வாழை நாரால் மத யானையைக் கட்ட முடியுமா? உப்பு மூட்டையால் கங்காநீரை அணை போட்டுத் தடுக்க முடியுமா? அற்பனாகிய கம்சனால் ஆதி முதல்வனை அழிக்க முடியுமா?

"கொடியவனாகிய கம்சனுடைய ஏவலினால் அழைக்க வந்த அடியவனாகிய என்னையும் எம்பெருமான் வஞ்சகன் என்று எண்ணுவாரோ? அவர் எல்லாம் அறிந்தவர். என்னுடைய அன்பு அவருக்குத் தெரியாதா? அவர் என் உள்ளக் கோயிலில்தான் குடியிருக்கிறார். ஆதலால் என்னைத் தவறாகக் கருத மாட்டார்" என்று மனம் தேறினார்.

வரும் வழியில் யமுனையின் நதிக் கரையில் தேரைவிட்டு இறங்கினார். பகவானுடைய பாதம் பட்ட அம்மணலையும் புழுதிகளையும் எடுத்து உடம்பில் பூசிக் கொண்டார். "ஆ! எம்பெருமானுடைய பாதங்கள் பலகாலும் படுவதற்கு இவை எத்தனை புண்ணியங்கள் செய்தனவோ?" என்றார்.

அவருடைய கண்களில் ஆனந்த நீர் ஆறாய்ப் பெருகிற்று. புளகாங்கிதம் அடைந்தார். பக்தியால் அவர் பரவசம் அடைந்தார்.

ஆயர்பாடியை அடைந்தார். பலராமரையும் பரந்தாமனையும் கண் குளிரக் கண்டார். ஐயன் அடி மலரை முடி மீது அணிந்தார்.

கண்ணபிரான் அக்ரூரரையும் அவருடைய அன்பு வெள்ளத்தையும் கண்டு கருணை புரிந்தார். அவரை மார்பு அழுந்தத் தழுவிக் கொண்டார்.

நந்தகோபர் அக்ரூரரை, வரவேற்றுக் கால் கை கழுவ நீர் கொடுத்தார். உயர்ந்த பீடத்தில் அமர்த்திப் பாலும் தேனும் தந்து பருக வைத்தார்.

"நற்குண சீலராகிய அக்ரூரரே! உமக்கு வணக்கம். கொடியவனாகிய கம்சனுடைய ஆட்சியில் நீர் சுகமாக இருக்கின்றீரா? வசுதேவரும் தேவகிப் பிராட்டியும் சுகமா? நீங்கள் அச்சமின்றி வாழ முடியாதே?" என்று வினவினார்.

அங்கே கண்ணபிரான் வந்து அக்ரூரரைப் பார்த்து, "அன்பரே! எமது தந்தையும் தாயும் என் பொருட்டுச் சிறைப்பட்டிருக்கிறார்கள். என்னால் அவர்கள் இடர்ப்படுகின்றார்கள். கம்சனுடைய ஆட்சி முடிவு பெறப் போகின்றது. நீர் வந்த காரணம் யாது?" என்று கேட்டருளினார்.

அக்ரூரர், "அருட்பெருந் தயாநிதியே! கம்சனுடைய ஆட்சியில் சுகம் என்பது அணுவளவும் கிடையாது. உங்களை வதைக்கும் பொருட்டுப் பலப்பல ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கின்றான். நாளை தநுர் வேள்வி புரிகின்றான். அதற்குத் தேவரீரையும் பலராமரையும் அழைத்து வருமாறு என்னை அனுப்பினான். நந்தகோபர் முதலியோர் கப்பங்களுடன் பால் தயிர் வெண்ணெயுடனும் வரவேண்டும் என்று கட்டளையிட்டிருக்கின்றான்" என்றார்.

அடுத்த நாள் நந்தகோபனுடைய ஆணையின்படி கோபாலர்கள் பால் குடம் நெய்க் குடம் வெண்ணெய்க் குடங்களை ஏந்திக் கொண்டு வரிசை வரிசையாக மதுரையை நோக்கிப் புறப்பட்டார்கள். நந்தகோபன் அரசனாகிய கம்சனுக்குத் தர வேண்டிய கப்பத்துடன் புறப்பட்டான்.

கண்ணபிரானும், பலராமரும் அக்ரூரரது தேரில் ஏறிச் சந்திர சூரியர்களைப் போல் புறப்பட்டார்கள்.


இதைக் கண்ட கோபிகா மாதர்கள் கண்ணீர் விட்டு அழுதார்கள். 'நம்மை விட்டுப் பிரியாதிருந்த பெருமானைப் பிரித்து அழைத்துப் போகிறீரே? இவர் குரூரமுடையவர். அக்குரூரர் அல்லர். இனி எம்பெருமானை என்று காண்போம்? அண்ணலே! அரிமுகுந்தா? உன்னைப் பிரிந்து நாங்கள் எவ்வாறு வாழ்வோம்? கருணாமூர்த்தியே! உன் மனம் என்ன இரும்பா? நாங்கள் துயரக் கடலில் வீழ்ந்து துடிக்கிறோமே! உன் மனம் இளகாதா?' என்று கூறி அலறினார்கள்; அழுதார்கள். கண்ணீர் சொரிந்து பரிந்து நின்றார்கள்.

கண்ணபிரான் தன்னை நினைந்து பிரிய மனமின்றிப் பிரியத்துடன் அழுகின்ற அபலைகளாகிய கோபிகா மாதர்களைப் பார்த்து, "உத்தம ரத்தினங்களே! நீங்கள் வருந்தற்க. தநுர் யாகத்தைப் பார்த்து, எமது உறவினரைச் சந்தித்து விட்டு மீண்டும் வந்து உங்களைச் சந்திப்பேன்" என்று அருளுரை கூறிப் புறப்பட்டார்.

அக்குரூரர் நடுவில் யமுனையில் இறங்கி நீராடினார். அங்கே நீரில் பலராமரையும் கண்ணபிரானையும் கண்டு அதிசயமடைந்தார். எழுந்து தேரைப் பார்த்தார். தேரின் மீது இராம கிருஷ்ணர்களைப் பார்த்தார். மீண்டும் நீரில் இறங்கினார். அங்கும் அவர்களைக் கண்டு அதிசயம் அடைந்தார். பகவானைப் பலப் பலவாறு துதி செய்தார்.

மதுரைக்கு அருகில் ஒரு வனத்தில் கோபால ஜனங்களுடனும் நந்தகோபனுடனும் கண்ணபிரான் தங்கினார். "அக்குரூரரே! நீர் முன்னே போம். நாளை நாம் மதுரை வருவோம்" என்று அவருக்கு விடை தந்தார். அக்குரூரர் ஆண்டவனுடைய ஆணையை மீறுவதற்கு அஞ்சித் தமது இல்லத்தை அடைந்தார். கண்ணபிரான் பலராமனுடனும், கோபாலர்களுடனும் மதுரைக்கு எழுந்தருளினார்.

(தொடரும்)



விடுமுறையில் விளையாட்டுக்கள்!

[உங்களுக்கெல்லாம் கோடை விடுமுறை ஆரம்பமாகி யிருக்கும். பலர் விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க வேறு இடங்களுக்குப் போவீர்கள். புதிய இடத்தில் புதிய நண்பர்கள் ஏற்படுவார்கள். அவர்களுடன் விளையாடி மகிழ இதோ சில புதிய விளையாட்டுக்கள்!

—ஆசிரியர்]

1. நம்பர் ப்ளீஸ்

கட்சிக்குப் பத்துப் பேர்களாகப் பிரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொருவரின் சட்டையிலும் பூஜ்யத்திலிருந்து ஒன்பது வரையில் உள்ள ஏதாவது ஓர் எண்ணை ஒரு காகிதத்தில் எழுதிக் குத்தி விடுங்கள். அந்த எண்தான் அவருடைய ஆட்டக் குறி எண். ஒவ்வொரு கட்சியிலும் 0யிலிருந்து 9 வரையுள்ள எண்ணைக் கொண்ட நபர்கள் இருப்பார்கள். இரு கட்சிகளுக்கும் பொதுவான ஒரு நீதிபதி இவ்விரு கட்சிக்கும் எதிரில் நிற்பார். அவரிடம் ஒரு பை இருக்கும். அதில் மூன்று ஸ்தான, நான்கு ஸ்தான, ஐந்து ஸ்தான எண்களை எழுதிய அட்டைகள் இருக்கும். அவர் அதிலிருந்து ஓர் அட்டையை எடுத்து ''ஏ டீம் 365'' என்று சொல்லுவார். உடனே ஏ டீமில் 3, 6, 5 என்ற இலக்கங்களைக் கொண்டவர்கள் முன்னால் ஓடிவந்து 365 என்று வரும்படி இணைந்து நிற்கவேண்டும். இப்படி வருபவர்கள் 563, 635, 356 என்று நின்று குழப்படி செய்தால் அவர்களைத் தோல்வி யடைந்தவர்களாக அறிவித்து அனுப்பி விட்டு அடுத்து 'பி' டீமை அழைக்க வேண்டும். இப்படி ஒவ்வொரு டீமுக்கும் பத்து வாய்ப்புக்கள் தர வேண்டும். சரியானபடி இணைந்து நிற்பதில் எந்தக் கட்சி அதிக பாயிண்டுகளை எடுக்கிறதோ அதுவே வெற்றி பெற்ற கட்சி. கட்சிக்குப் பத்துப்பேர் மட்டுமே இருந்தால் பைக்குள் இருக்கும் எண்களில் ஒரே இனத்தில் இரண்டு எண்கள் வரும்படியாக இருக்கக்கூடாது. உதாரணம்: 6486, 1831. ஒரு கட்சியில் ஓர் ஒன்றும் ஆறுந்தானே இருப்பார்கள். ஆகவே எப்படி அமைய முடியும்? பத்துக்கு அதிகமான பேர் இருப்பார்களானால் இம்மாதிரி பெரிய எண்களை அமைத்து அழைக்கலாம். எண்களை அமைக்க ஓடிவந்து நிற்கும் போதும் தமாஷ் நிறைய இருக்கும்.




2. புதிய கண்ணாமூச்சி

இந்த விளையாட்டில் எத்தனை பேர் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம். ஒருவரை அறைக்கு வெளியே அழைத்துப் போய் அவரது கண்களைக் கட்டி அங்கேயே இருக்கச் செய்துவிட்டு, முன் ஹாலில் கூடியுள்ளவர்களை வட்டமாக நாற்காலிகளில் உட்காரச் சொல்ல வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒரு பிராணியின் பெயரைக் கொடுக்க வேண்டும். இனி கண்ணைக் கட்டி வைத்திருக்கும் நபரை அழைத்து வந்து ஆட்டக்காரர்கள் உட்கார்ந்துள்ள வளையத்துக்குள் விட வேண்டும்.

அவர் கைகளைத் துழாவாமல் மெல்ல ஊர்ந்து போய் ஒரு நபரின் மடியில் உட்காரவேண்டும். உட்கார்ந்ததும் அவரிடம், ''நீ என்ன பிராணி?'' என்று கேட்க. அந்த நபர் தான் ஏற்றுள்ள பிராணியைப் போல் குரல் கொடுப்பார். அவருடைய குரலிலிருந்து அவர் யார் என்பதையும், அவர் ஏற்றுள்ள பிராணி எது என்பதையும் கண் கட்டுண்டவர் ஊகித்துச் சொல்ல வேண்டும். ஓர் ஊகத்துக்குத்தான் அனுமதி உண்டு. ஆனால் அந்த நபரை இரண்டு மூன்று முறை குரல் கொடுக்கச் சொல்லலாம். ஊகம் தவறானால் அடுத்தவர் மடியைத் தேடிப் போக வேண்டும். சரியானால் கட்டுண்டவரின் கர்ச்சீஃப், கண்டு பிடிக்கப்பட்டவரின் கண்களை மறைக்கும். அவரை அடுத்த அறைக்குக் கொண்டு போய் வைத்துவிட்டு ஆட்டக்காரர்கள் தங்கள் இடங்களையும் பிராணிகளின் பெயர்களையும் மாற்றிக் கொள்ள வேண்டும்.





1 பிரேஸில் நாட்டின் முக்கியமான நதி எது ? A அமேஸான் நதி B பிளேட் நதி

2. சால்மன் என்று ஒருவகை மீன். இது தன் முட்டைகளை இடுவது எங்கு தெரியுமா ?

A ஓடைகளில் B கடலில்

3. கீழே உள்ள கணக்கின் விடை எது வாக இருக்கும்? 3, 3/8+2, 1/8+1/2=

A 6-1/2 B 6

4. 'கார்னிவோரஸ்' என்பது பிராணி இனங்களில் ஒருவகை. இவை சாப்பிடும் உணவுகள்.....

A தாவர உணவு B மாமிச உணவு

5. 'வாக்ஸினேஷன்' செய்து கொள்ளுவதினால் தடுக்கப்படும் வியாதி என்ன ?

A இளம்பிள்ளை வாதம் B பெரியம்மை

6. 'லாவா' என்றால் என்னவென்று தெரியுமா இது எங்கிருந்து வருகிறது ?

A எரிமலையிலிருந்து B நதிகளிலிருந்து

7. 'டாபியோகா' (ஜவ்வரிசி) எந்தத் தாவரத்திலிருந்து கிடைக்கிறது ?

A காஸாவா B சிஸல்

8. மொரீஷியஸ் தீவு எந்தக் கடலில் உள்ளது ?

A பசிபிக் கடலில் B இந்தியக் கடலில்

9. மலாயா நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருள்....

A தேயிலை B ரப்பர்

10. புகழ்பெற்ற செயின்ட் பீட்டர் மாதா கோயில் எங்குள்ளது ?

A இங்கிலாந்தில் B ரோமில்

11. 'ஐஸ்பர்க்' (பனிப் பாறைகள்) பற்றிப் படித்திருப்பீர்களோ? இதில் நீருக்கடியில் உள்ள பாகம் எத்தனை ?

A 9/10 B 1/2



4. நூதனக் கால் பந்தாட்டம்

ஆட்டக்காரர்களை ஒவ்வொரு கட்சியிலும் சம எண்ணிக்கை இருக்கும்படி இரு கட்சிகளாக வகுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு கட்சிக்காரரும் வரிசையாகப் போடப்பட்டுள்ள நாற்காலிகளில் கைகளை ஒவ்வொருவர் தோள் மீதும் பின்னல் போட்டு அணைந்தபடி உட்கார்ந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு கட்சியிலும் முதலில் இருப்பவரின் ஒன்று சேர்ந்த கால்களின் மீது ஒரு டென்னிஸ் பந்து வைக்கப்படும். 'ஆரம்பிக்கலாம்' என்று அனுமதிக் குரல் கொடுக்கப்பட்டதும் முதல் ஆட்டக்காரர் தம் காலில் உள்ள பந்தை அடுத்தவரின் காலுக்கு, தனது கால்களை மட்டுமே பயன்படுத்தி – மாற்ற வேண்டும். இப்படியே அடுத்தடுத்து மாற்றப்பட்டுப் பந்து கட்சியிலுள்ள கடைசி நபரிடம் போய் மறுபடியும் அதேபோல் மாற்றப் பட்டு அக்கட்சியின் முதல் நபரிடமே பந்து கால்களின் மூலம் திரும்பி வர வேண்டும். நடுவழியில் பந்து நழுவிக் கீழே விழுமானால், போகும் வழிப் பிரயாணத்தில் ஆரம்பித்த இடத்துக்கும் திரும்பு வழிப் பிரயாணத்தில் அதே போல் கடைசி நபரிடமும் பந்து திருப்பப்பட்டு மறுபடியும் பந்தின் பிரயாணத்தைப் புதிதாகத் தொடரச் செய்ய வேண்டும். எந்தக் கட்சி பந்தைக் கீழே வீழ்த்தாமல் கோடிக்கு அனுப்பி மறுபடியும் திரும்பப் பெறுகிறதோ அதுவே வெற்றி பெற்ற கட்சியாகும்.




5. காற்றாடி செய்யலாமா?

பொழுது போகவில்லை. விளையாடுவதற்கு வேறு யாரும் இல்லை. என்ன செய்யலாம்? ஒரு கெட்டியான காகிதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதைச் சச்சதுரமாக வெட்டிக் கொள்ளுங்கள். இனி அதைக் கீழ்க்கண்ட விளக்கங்களின் படி மடிக்க வேண்டியதுதான்.

படம் 1. AB முனைகளை உள் பக்கமாகவும், CD முனைகளை வெளிப் பக்கமாகவும் மடித்துக் கொள்.

படம் 2. EF முனைகளை உள்பக்கமாகவும் GH முனைகளை வெளிப்பக்கமாகவும் மடி.

படம் 3. ABCD முனைகளை வெளியே இழுத்தால் படம் 4ல் உள்ளது போன்ற காற்றாடி கிடைக்கும். அதன் நடுவில் ஒரு வட்டக் காகிதத்தை முன்னும் பின்னும் ஒட்டி அதில் ஒரு நீண்ட குண்டூசியைச் செருகி; ஊசி முனையைப் பென்சிலிலோ ஒரு குச்சியிலோ குத்தி நிறுத்தினால் சுழல்வதற்கு ஏற்றபடி காற்றாடி அமைந்து விடும். அதைப் பிடித்துக் கொண்டு ஓடினாலோ காற்று வீசும் திசையில் நின்றாலோ காற்றாடி வேகமாகச் சுழல்வதைக் கண்டு நீ மகிழலாம்.



6. துப்பறியப் போகலாமா ?

பொருள்களையோ இடங்களையோ பார்க்கும் போது மிக நுணுக்கமாக நோக்க வேண்டும். சிறு விவரங்களையும் மறக்காமல் நினைவில் வைத்துக் கொள்ளப் பழக வேண்டும். இந்தச் சாதனை பிற்காலத்தில் நீங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் தொழில் முறைக்கு மிக்க உதவியாக இருக்கும். உங்கள் ஞாபக சக்தியைச் சுறுசுறுப்பாக்கிக் கொள்ளவும் இந்த விளையாட்டு உதவும். உங்கள் ஊருக்கு விடுமுறையைக் கழிக்கப் புதிதாக வந்திருப்பவர்களைக் கொண்டு இந்த விளையாட்டை விளையாடினால் சுவாரசியமாக இருக்கும். இதில் எத்தனை பேர் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம். இரண்டு இரண்டு பேர்களாக 'க்ரூப்' பிரித்து ஒவ்வொரு ஜோடியிடமும் கீழே உள்ளது போன்ற ஒரு வினாத்தாளை அந்தந்த ஊர்ச் சூழ்நிலைக்கு ஏற்பத் தயாரித்துக் கொடுத்து அவைகளுக்கான விடைகளை நேரில் போய் அறிந்து பூர்த்தி செய்துவருமாறு அனுப்புங்கள். விடைகளோடு முதலில் எந்த ஜோடி வருகிறதோ அவர்களுக்கு 50 பாயிண்ட். அடுத்து வருபவர்களுக்கு 45 பாயிண்ட். மூன்றாவதாக வருபவர்களுக்கு 40 பாயிண்ட். இப்படியே மற்றவர்களுக்கும். இதன் பிறகு விடைகளைச் சரிபார்க்க வேண்டும். முடிவாக மதிப்பிடும்போது ஒவ்வொரு தவறுக்கும் அவரவர் எடுத்துள்ள பாயிண்டில் 5 பாயிண்டுகளைக் குறைத்து விடுங்கள்.

மாதிரி வினா :

1. தில்லானா தெரு 37ம் எண்ணுள்ள வீட்டுக்குப் போய்த் திருவாளர் பாண்டுரங்கம் அவர்களுடைய பாட்டியின் மாமனாருடைய சொந்த ஊரை விசாரித்துத் தெரிந்து வரவும். (பாண்டுரங்கம் அவர்களுடன் முன்கூட்டியே இதுபற்றித் தெரிவித்திருப்பது நலம். விசாரிக்கப் போகிறவருக்குச் சிரமம் ஏற்படாது.)

2. அப்படியே அந்த வீட்டிலிருந்து கிழக்காக 120 கெஜங்கள் நடந்துபோய் அங்குள்ள தந்திக் கம்பத்தின் மேலுள்ள நம்பரைக் குறித்துக்கொண்டு வரவும்.

3. தந்திக் கம்பத்திலிருந்து மேலும் 40 கெஜங்கள் போய் வலதுபக்கம் திரும்பி முந்நூறு தப்படி வைத்தால் ஒரு தோட்டத்தில் உள்ள மரத்தின் முன்னால் போய் நிற்பாய். அந்த மரத்தின் பெயரைக் கூறு.

4. கோடையிடித் தெரு கோடி வீட்டின் ஜன்னல் திரைச் சீலையின் வண்ணமென்ன ?

5. அந்த வீட்டை அடுத்து வீதியில் உள்ள தபால் பெட்டியில் அடுத்துக் கடிதம் எடுக்கும் நேரம் என்ன என்று குறித்துக்கொண்டு வா.

6. தேரடிக் கடை வீதியில் 16ம் எண்ணுள்ள கடையின் விளம்பர ஷோ கேஸிலுள்ள முக்கியமான பொருள் என்ன ?

7. அரண்மனைத் தெருவின் இடதுசாரியில் 30வது எண்ணுள்ள வீட்டுக்கு எதிர் வீட்டின் இலக்கமென்ன?

8. தபாலாபீஸுக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கும் இடையே எத்தனை தந்திக் கம்பங்கள் உள்ளன ?

இவை ஓர் உதாரணத்துக்குத்தான். இந்த முறையில் இன்னும் நுணுக்கமாகவும் குழப்பமாகவும் ஆனால் உண்மையான செய்திகளைக் கொண்டு பத்து வினாக்களைத் தயாரியுங்கள். அவர்கள் சேகரித்து வரும் விடைகளைச் சரிபார்க்கும்போது தமாஷாக இருக்கும். ஊருக்குப் புதியவர்களானால் அவர்களுக்கு நேர்ந்த அனுபவங்களைக் கேட்பதில் பெரு மகிழ்ச்சி ஏற்படும்.



சிமெண்ட்

"சிமெண்டைத் தெரியாதாக்கும். கட்டிடங்கள் கட்டுவதற்குப் பயன்படும் ஒரு பொருள்" என்று நீங்கள் நினைப்பது தெரிகிறது. ஆனால் அதை எப்படித் தயாரிக்கிறார்கள் என்று தெரியுமா?

மணல், பாறைக் கற்கள் இவைகளிலிருந்து உருவாகிறது சிமெண்ட். இவ்விரண்டையும் கலந்து இக் கலவையை மிக நுண்ணிய பொடியாக்குவார்கள். பிறகு இதை உருகுமளவுக்கு உஷ்ணப் படுத்துவார்கள். கல் உருகுமா என்ற சந்தேகம் வேண்டாம் உங்களுக்கு. 'கல்லுருகப் பாடினன்' என்று சொல்வதில்லையா? ஆகவே பொன்னைப் போலவே கல்லும் உருகும். மிக மிக உயர்ந்த உஷ்ண நிலையில் இக் கல் கலவை உருகும். அதை அப்படியே குளிர வைப்பார்கள். இது கெட்டியான கல்லாகும். இப்படி உருகிக் குளிர்ந்து கெட்டியான கல்லை மறுபடியும் பொடித்துப் 'பௌடர்' ராக்கிப் பைகளில் நிரப்பி 'சிமெண்ட்' என்று விற்பனைக்கு அனுப்புகிறார்கள்.

இந்தப் பொடியை நீருடன் கலந்தால் பௌடர் சிமெண்ட் மறுபடியும் கெட்டியான கல்லாகி விடும். நீரின் அடியிலே இது மிக மிக உறுதியானதாக விளங்கும். மணல் சிறு கருங்கல் ஜெல்லிகள் இவற்றோடு சிமெண்டையும் நீரையும் முறைப்படி கலந்து இரும்புக் கம்பிகளை ஊடே கொடுத்து இறுகும்படி விட்டால் உறுதியான காங்க்ரீட் ஆகிறது. இந்தக் கான்கிரீட்டினுல் பாலங்கள், அணைகள், உயர்ந்த கட்டிடங்கள், நெடுஞ்சாலைகளை அமைக்கிறார்கள்.

கோக்

கோக் மிக உயர்ந்த உஷ்ணத்தைத் தரக்கூடியதோர் எரிபொருள். கோக் நிலக்கரியிலிருந்துதான் உண்டாகிறது. அரை குறையாகச் சுடப்பட்ட நிலக்கரிக்குத்தான் 'கோக்' என்று பெயர். நிலக்கரியை மிக நிதானமாக அதிகக் காற்றைச் செலுத்தாமல் எரிய விடுகிறார்கள். இதனுல் நிலக்கரியிலிருந்து சில வாயுக்கள் வெளியே நீங்கிவிடுகின்றன. இம்முறையில் நிலக்கரி முழுதும் எரிந்து சாம்பலாவதில்லை. ஒரு பாகம் கல் கரியாக அடியில் தங்கிவிடுகிறது. இதுவே கோக். கோக் நிலக்கரியை விட மிகவும் கனம் குறைவானது. பளபளக்கும் கறுப்பு நிறம் கிடையாது இதற்கு.

நிலக்கரியைவிட மிக மிக அதிகமான உஷ்ணத்தைக் 'கோக்' கரி கொடுக்கிறது. உஷ்ணத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள்ளுகிறது இது. ஆகவேதான் 'கோக்' தயாரிப்பதில் மனிதன் ஆர்வம் உள்ளவனாக இருக்கிறான்.

உருக்கு ஆலைகளுக்கு ஏராளமான உஷ்ணம் தரும் எரிபொருள் தேவை. இங்கு கோக்குக்கு ராஜ மரியாதை. நீராவி யந்திரங்களுக்கும் கோக் பயன்படுகிறது. கோக் உலைக்களத்தினுள் பார்த்தீர்களானுல் தக தகவென்ற சிவப்பு அனலைத்தான் காண்பீர்கள். நிலக்கரி, மரக்கட்டைகளைப் போலக் கொழுந்து விட்டு எரியும் சுடரைப் பார்க்க முடியாது. இப்படி எரிவதில் உஷ்ணம் குறைவு. கோக் கனன்றால் அத்தனையும் பயங்கரமான உஷ்ணம்.

மலைகள்

பல கோடி ஆண்டுகளுக்கு முன்னுல் நாம் வசிக்கும் பூமி பெரிய நெருப்புக் கோளமாக இருந்தது. இப்போதைவிட மிகப் பெரியதாகவும் மிக மிக உஷ்ணமாகவும் இருந்தது. மெள்ள மெள்ளப் பூமி குளிர்ந்தபோது அதன் மேல் பகுதி ஒரு பழத்தின் ஓடுபோலக் கெட்டியாகியது. ஆனுல் உள்ளே நெருப்புக் கனன்று கொண்டிருந்தது. கெட்டிப்பட்ட மேல் பரப்பைப் பொத்துக் கொண்டு திடீர் திடீரென்று உள்ளிருக்கும் நெருப்பு வெளியே பொங்கி வழியும். அப்போது ஏராளமான கல்லும் மண்ணும் வெளியே வீசப்படும். வருஷங்கள் ஆக ஆகப் பூமியின் மேல் பாகம் அதிகக் கெட்டியாகியது. முன்பு போல் அடிக்கடி மேல் பரப்பைப் பெயர்த்துக் கொண்டு நெருப்புக் குழம்புகள் வெளிப்பட முடியாவிட்டாலும் அவ்வப்போது ஆங்காங்கு இப்படிப் பூமிதன்னுள்ளிருந்து உருகிய கல்லையும் கட்டிகளையும் வெளியே உமிழ்ந்தான் செய்தன. இப்படிப் பூமியினுல் வெளியே வீசப்பட்ட கல் குவியல் குளிர்ந்து கெட்டியானவையே இன்றைய மலைகள்.

பூமி குளிரக் குளிர அது உருவத்தில் சிறிதாகியது. கத்திரிக்காயை அடுப்பில் விட்டுச் சுடும்போது பெரிதாகும். அதை வெளியில் எடுத்துக் குளிர விட்டபின் உருவத்தில் சிறுத்தும் மேல் தோல் சுருங்கியும் தோன்றுமல்லவா? அதே போல் பூமி குளிர்ந்ததும் அதன் மேல் பாகத்தில் சுருக்கங்கள் ஏற்பட்டன. இந்த மடிப்புக்களே மலைத் தொடர்கள்.

கண்ணன் கதை சொல்லும் வாரியார் தாத்தாவை வரைந்து பாருங்கள் - தாணு



அடுத்த இதழில் யார்?

கண்ணம்மா

கவியோகி சுத்தானந்த பாரதி

கண்ணம்மா என்னம்மா
கற்கண்டே வாவா
விண்ணம்மா நீஎனக்கு
விளக்கொளியே வாவா

பொன்னிளங் காலைபூத்த
புன்னகையே வாவா
அன்னம்போலே தவழ்ந்தே
அமுதேநீ வாவா!

அன்புமுத்த மிட்டேநான்
அரவணைக்க வாவா
அள்ளிக் கலக்க வாவா
இன்பக் கதைகள் சொல்வேன்
எழிலேநீ வாவா!

வண்டாடும் கண்மலரே
வானமுதே வாவா
செண்டு மல்லிகை போலே
சிரித்தாடி வாவா!

மின்னற்கோத்த முத்தே
மெல்லிய ரோஜாவே
வன்னத்தாமரை யடிகள்
வைத்தென்மேல் வாவா!

மாங்கனிவாய்க் குயில்போலே
மழலைபேசி வாவா
தீங்குழல் யாழினும் இனிய
செந்தமிழே வாவா!.

நல்ல நல்ல கதைகளெல்லாம்
நவிலுகிறேன் வாவா
எல்லையில்லாப் பேரின்பம்
எனக்குன் முகப்பொலிவே!

நாளுக்குநாள் வளம்பெருகி
நாடோங்க வாவா
தோளுக்குத்தோள் கொடுத்துலகத்
தோழனாக வாவா!

தேர்உருட்டும் உன்னிடையே
திருக்குறளைக் கண்டேன்
பார்வையிலே கீதைகேட்ட
பார்த்திபனைக் கண்டேன்!

கண்ணம்மா என்னமுதே!
கட்டிக்கரும்பே வா — என்
எண்ணமெல்லாம் விளையாடும்
இன்பக்கனவே வாவா!

படம் எடுத்தவர் : புவனு



நான் யார்?

மீ. ப. நாராயணன்

முன்னவனும் நீங்கிநின்றால்
மூன்றெழுத்து இனமாவேன்
இரண்டாமவன் எட்டிநின்றால்
இல்லம்முன் இழுபடுவேன்

முன்னவனின் கொம்புங்காலும்
அடுத்தவனும் அகன்றிடிலோ
மண்ணாலுருபவர் செய்துவைத்த
மகிமையுள்ள பாண்டமாவேன்

முதலெழுத்தால் நானும்ஒரு
முடிமன்னன் ஆகிடுவேன்
எதிலும்வல்ல தம்பிநீயும்
எங்கேகூறு என்பெயரை!

[illegible]



சிட்டு!

தமிழ்மகன்

சிட்டுச் சிட்டெனக் கத்தும்
குட்டை நெல்லைக் கொத்தும்

பொட்டுக் கண்ணைச் சாய்க்கும்
சுட்டுக் காவல் ஏய்க்கும்

பட்டு வாலை ஆட்டும்
மொட்டு மூக்கை நீட்டும்

எட்டப் போனால் இருக்கும்
கிட்டப் போனால் பறக்கும்

சிட்டு சிட்டு சிட்டு
தொட்டுப் பாரு, பட்டு

வண்ணத்துப் பூச்சி

என். வஜ்ரவேலு

பட்டுப்போன்று
பளபளக்கும்
வண்ணத்துப்பூச்சி — நீ
பாடிக்கொண்டு
செல்வதென்ன
வண்ணத்துப் பூச்சி!

எட்டு திக்கும்
பறந்துசெல்லும்
வண்ணத்துப்பூச்சி — நீ
எத்தனை பூத்
தேன் குடித்தாய்
வண்ணைத்துப் பூச்சி!

வட்ட.மிட்டுப்
பறந்து செல்லும்
வண்ணத்துப் பூச்சி! நீ
மட்டும் தேனைக்
குடிப்பதேனோ
வண்ணத்துப் பூச்சி!

கொட்டக் கொட்ட
விழிக்கிறேனே
வண்ணத்துப் பூச்சி —
ரெண்டு
சொட்டுத் தேனை
நாக்கில் [illegible]
வண்ணத்துப் பூச்சி!

தாவரங்கள்

புஞ்சை மா. ஜெயராமன்

குட்டையாய் இருப்பது கொடி
கொம்பில் படருவது கொடி
நெட்டையாய் இருப்பது மரம்
நெடிது வளர்வதும் மரம்

புல்லுடன் பூண்டும் கீரை
பூமியுள் கிழங்கு கோரை
முள்ளுடன் காளான் பாசி
முற்றிலும் தாவரம் ஆகும்.

லாரன்ஸ் பள்ளிக்கூடம்

'சோமலெ'

தமிழ் நாட்டில் மலை வளமும் வனப்பும் மிக்க மாவட்டம் நீலகிரி. இதில் இயற்கை வளம் நிறைந்தது, ஊட்டி எனப்படும் உதகையும் அதன் சுற்றுப் புறமும்.





இந்தியப் படையில் தளபதியாக இருந்த ஸர் ஹென்றி லாரன்ஸ் ஆங்கிலேயருடைய பாணியில் தம் பெயரால் அமைத்த பள்ளிக்கூடம் **லாரன்ஸ் ஸ்கூல்**. இதை **லவ்டேல் ஸ்கூல்** என்றும் கூறுவர். ஊட்டியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள லவ்டேல் ரயில் நிலையத்தின் ஓரமாக இப்பள்ளி இருப்பதால் பள்ளிக்கு இப் பெயர்.


இந்தியப் படையில் பணியாற்றிய வீரர்கள், ஓய்வு பெற்ற தளபதிகள் ஆகியோரின் குழந்தைகள் நல்ல முறையில் கல்வி பெற இதை ஏற்படுத்தினார் லாரன்ஸ்.

இங்கு ஆங்கிலத்துக்குத்தான் முதலிடம். இப்போது இந்தியும் கட்டாய பாடம்.

லாரன்ஸ் பள்ளியில் மேலை நாட்டு இசைக் கருவிகளை இசைக்கக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இப்பள்ளி 2000 அடி உயரத்தில் உள்ளது. லவ்டேல் 7,300 அடி உயரத்தில் உள்ளது. குளிர் அதிகம். அதற்கு ஏற்றவாறு பள்ளிச் சீருடைகள் அமைந்திருக்கின்றன.

ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளும் தரை, கடல், விமானப் படைப் பயிற்சியும் குதிரைச் சவாரியும் துப்பாக்கி சுடுவதும் பயிற்றுவிக்கப்படுகின்றன. குத்துச் சண்டை பழகுவதும் இங்கு கட்டாயம். ஆகாய விமானங்கள் செய்வதற்கும் இங்கு பழக்கப்படுகிறது. ஞாயிற்றுக் கிழமைகளில் மாணவர்கள் காடுகளுக்குள் பிக்னிக் என வழங்கப்படும் வன போஜனத்துக்குச் செல்லுகிறார்கள். மூளைக்கு வேலை கொடுக்கும் செஸ் முதலிய ஆட்டங்கள் ஆடவும், தாங்களே சோதனை செய்து அறிவியல் பாடங்களைப் புரிந்து கொள்ளவும் லவ்டேலில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இந்தப் பள்ளியில் பெண்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

மாதந்தோறும் வெளிவரும் 'லாரன்சியன்' என்ற பத்திரிகையில் மாணவ



மாணவியரின் கட்டுரைகள் பாடல்கள் வெளிவருகின்றன பத்து ஆண்டுகளுக்கு முன் இது ஆங்கில சஞ்சிகையாக இருந்தது. இப்போது இந்த வெளியீட்டில் தமிழிலும் விடுகதைகள், சிறு கட்டுரைகள், பாட்டுகள் ஓரளவு இடம் பெறத் தொடங்கியிருக்கின்றன. சுதந்திரத்துக்குப் பிறகு மாணவர் விரும்பிகிறது. மாணவர்களே பங்கு கொள்ளும் நாடகங்களும் உண்டு.

முன்பு இப்பள்ளி மாணவர்கள் சீனியர் கேம்பிரிஜ் பரீட்சை எழுதினார்கள். இப்போது Indian School certificate தேர்வு எழுதுகிறார்கள். இது பதினோராவது வகுப்புக்குச் சமமானது.

இந்தப் பள்ளிக்கூடத்தில் மாதச் செலவு சராசரி ரூ. 400 வரை ஆகும்.





னால் தமிழ் அல்லது மலையாளம் படிப்பதற்கு லவ்டேலில் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இந்திய இசையும் லாரன்ஸ் பள்ளிக்குள் நுழைந்திருக்



செல்வக் குடும்பத்தினர்தான் படிக்க இயலும். அவர்களுக்கும் லாரன்ஸ் பள்ளியில் இடம் கிடைப்பது அவ்வளவு எளிதல்ல. குழந்தை பிறந்த உடனே இருபத்து மூன்று ரூபாய் கொடுத்துப் பதிந்து வைத்தால் பத்துப் பதினொரு வயதில் இடம் கிடைக்கலாம்.

கடந்த சில ஆண்டுகளாக வசதியில்லாத சுமார் 20 மாணவரையும் இந்தப் பள்ளியில் சேர்த்து அவர்களுடைய எல்லாச் செலவையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. பெற்றோரின் மாத வருவாய் 400 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால்தான் இந்தச் சலுகை.

யாரைச் சேர்ப்பது என்பதற்காக 9 வயதுக்கு மேல் 12 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் ஜூன் மாதம் ஒவ்வொரு மாநிலத்திலும் கல்வித் துறைத் தேர்வு நடத்தி அதில் தேர்ச்சி யடைந்தவர்களுக்கு, மீண்டும் இந்திய அரசு இந்தியாவெங்கும் ஒரு தேர்வும், நேர்முகப் போட்டியும் ஏற்பாடு செய்கிறது. இவற்றின் அடிப்படையில் தகுதியும் திறமையும் உள்ளவர்களுக்கு இதுபோன்ற பள்ளிகளில் இடம் ஒதுக்கப் படுகிறது. கோகுலம் படிக்கும் மாணவரில் யாருக்காவது இந்தச் சலுகை கிடைத்திருந்தால் எழுதுங்கள்.

பெருந்தன்மை

புலவர் கலைச்செழியன்

இடைவேளை மணி ஒலித்தது.

மாணவர்கள் அனைவரும் வகுப்பை விட்டு வெளியேறத் தயாராயினர். சுகுமார் தன் இடத்திலிருந்து எழுந்து, அருகில் அமர்ந்திருந்த சுந்தரைப் பார்த்தான். ''எனக்குத் தலை வலிக்கிற மாதிரி இருக்கிறது. நான் வரவில்லை. நீமட்டும் போய்வா, சுகுமார்!'' என்றான் சுந்தர்.

''சரி'' என்று நகர்ந்தான் சுகுமார்.

நண்பன் போனவுடன் அவனது கணிதக் கருவிப் பெட்டியைத் தற்செயலாகத் திறந்தான் சுந்தர். அவனுக்கு வியப்புத் தாங்கவில்லை. பெட்டிக்குள் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்று நான்காக மடித்து வைக்கப்பட்டிருந்தது.

சுந்தருக்கு வலிய வந்த அதிர்ஷ்டமாகத் தோன்றியது அந்த ஐந்து ரூபாய். அவனுக்கு அப்போது தேவை நான்கு ரூபாயும் எழுபத்தைந்து காசுகளும். பள்ளிக்கு அவன் கட்ட வேண்டிய சிறப்புக் கட்டணம் அது. கட்டணம் கட்டக் கடைசி நாளும் அன்றுதான்.

இடைவேளை முடிய இன்னும் சில நிமிடங்கள் இருந்தன. சுற்று முற்றும் பார்த்தான் சுந்தர். உடனே பெட்டியிலிருந்த அந்த ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துத் தன் கால் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான். விடுவிடுவென்று பள்ளி அலுவலகத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

முதலில் சுந்தர் பணத்தைத் துணிச்சலாக எடுத்து விட்டானே தவிர இப்போது மனச்சாட்சி அவனை உறுத்தத் தொடங்கியது. 'நன்கு பழகிய நண்பனிடமே அயோக்கியத்தனத்தைக் காட்டி விட்டேனே! இதைவிடப் பெரிய துரோகம் என்ன இருக்க முடியும்?' என்று தனக்குத் தானே கேட்டுக்கொண்டான் அவன்.

'நீ இன்று கட்டணம் கட்டாவிட்டால் உன் பெயர் வருகைப் பட்டியலின்றும் எடுக்கப்பட்டு விடும். அப்புறம் எப்போது கட்டணம் கட்டிச் சமாளிக்கப்போகிறாய்? ஆண்டவனைப் பார்த்து உனக்கு வழியைக் காட்டினார். நீ பணத்தை எடுத்துக் கொண்டதில் தவறு இல்லை' என்று அவனை அடக்கப் பார்த்தன தேவையும் ஆசையும்.

ஆனாலும் அலுவலகத்தை நெருங்கிய போது அவனது மனச்சாட்சியின் வலுவே அதிகமாயிற்று. பள்ளிக் குமாஸ்தாவிடம் பணத்தைக் கொடுத்தபோது அவன் கைகள் நடுங்கின. நெஞ்சம் விம்மியது. தன் பெயரைச் சொல்லுவதற்குப் பதிலாக ''பி. சுகுமார், எட்டாம் வகுப்பு'' என்று சொல்லிவிட்டான்.

அதே சமயம், ''இல்லை, இல்லை. எஸ். சுந்தர் என்று ரசீது போடுங்கள் சார்! சுகுமார் பெயருக்கு ஏற்கனவே பணம் கட்டியாகி விட்டது'' என்று ஒரு குரல் அவன் அருகே ஒலித்தது. திடுக்கிட்டுத் திரும்பினான் சுந்தர். சுகுமார் சிரித்த முகத்துடன் அருகே நின்று கொண்டிருந்தான்.

குமாஸ்தா தந்த ரசீதையும் மீதிச் சில்லறையையும் பெற்றுக் கொண்டு, யந்திரம் போல் சுகுமாரைத் தொடர்ந்தான் சுந்தர். வெட்கமும் வேதனையும் அவனைப் பிடுங்கித் தின்றன!

''நீ பணம் கட்ட முடியாமல் தவிக்கிறாய் என்பது தெரிந்து உனக்காகத்தான் அதைக் கொண்டு வந்திருந்தேன், சுந்தர்! ஆனால் உன்னிடம் சொல்ல மறந்து போனேன். இடைவேளையில் வெளியே போனபோதுதான் நினைவு வந்தது. உடனே வகுப்புக்குத் திரும்பினேன். ஆனால் நீ என் ஜியாமெட்ரி பாக்ஸைத் திறந்து குடைந்து கொண்டிருப்பது ஜன்னல் வழியாகத் தெரிந்தது. நீ என்ன செய்கிறாய் என்று பரிசோதிக்க நினைத்து நான் பதுங்கிக் கொண்டேன். பின்பு நீ அறியா வண்ணம் உன்னைப் பின்தொடர்ந்தேன். நான்தான் பணம் கட்டவில்லை என்று நினைத்துக் குமாஸ்தாவிடம் என் பெயரை நீ கூறியபோது எனக்குப் பெருமையாய் இருந்தது. உன் மேல் வீணான சந்தேகம் கொண்டதற்காக வருத்தமும் ஏற்பட்டது'' என்று கூறினான் சுகுமார்.

யார் படவேண்டிய வருத்தத்தை யார் படுவது? சுகுமாரின் பெருந்தன்மை சுந்தரின் மனத்தைத் தொட்டது.




புகைப்படம் எடுப்பது பொழுதுபோக்கு

டாக்டர் ஸக்லத் மருத்துவத்தில் மயக்கம் தருந் துறையில் ஆராய்ச்சி செய்து வருபவர். அண்மையில் அவர் இந்தியா வந்திருந்தபோது அவருக்குப் பொழுது எத்தனை அழகாகப் போயிருக்கிறது பாருங்கள்.



பூப் புதுசு புன்னகை பழசு !



" ஏ அம்மா ! எதுக்கு இத்தனே உசரமா வாசப்படி வைச்சிருக்காங்க ?"



"! என்னடா காதைக் கடிக்கிறே ?"





" பாலிருக்கா, பழமிருக்கா ? பசியிருக்குது."


கூண்டுக்குள்ளே இருக்கும் ரெண்டும் இன்னு பேசுது?

குந்தியிருக்கும் குமரி தனக்கு இன்னு ரோசனே ?




ஐயோ! இத்தனை அருகில் வந்து விட்டார்களே..
ம்.. சீக்கிரம் பாறைகளைப் பிடித்து ஏறப்பா.. இந்தத் தடவையும் கோட்டை விடப் போகிறோம்.
பாறைகளைப் பற்றி ஏறிவரும் அவர்களை டைகர் தடுத்து நிறுத்தியது. ஷீலா ஓடலானாள்...
டைகர்.. சீக்கிரம் என் பின்னாலேயே ஓடி வா.
பிடி நழுவி அவர்கள் பாறைகளில் உருண்டு கீழே விழும்படி செய்த பிறகு தான், டைகர் ஷீலாவோடு வந்து சேர்ந்து கொண்டது. இருவரும் ஓடி ஓடி.. தூரத்தே ஒரு மர வீடு தென் பட்டது...
யார் நீ? இங்கு தனியாக எப்படி வந்தாய்?
ஷீலா தன் கதையைக் கூறியதும் அந்தக் கிழவர் அவளை அன்போடு உபசரித்தார். ஈர உடைகளைக் களைந்து காய வைத்துச் சூடச் சூட...
இந்தா இந்த டீ யைக் குடி, இதமாக இருக்கும். கவலைப் படாதே. உன் கூடக் காவல் வேலை செய்கிறது பார்.
எதிர் பார்த்தபடி அவர்கள் இருவரும் வந்தே விட்டார்கள்...
பெரியவரே! இதோ புத்தம் புதிய நோட்டுக்கள். இதில் ஐநூறு ரூபாய் இருக்கிறது. அந்தப் பெண்ணை — எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள்.
பெண்ணா? உங்களுக்கு என்ன பைத்தியமா? யாருக்கு வேணும் உங்கள் பணம். மரியாதையாகப் போய் விடுங்கள் இங்கிருந்து.
தொடரும்..


கதை: வாண்டுமாமா
ஷீலாவைக் காணோம்
சித்திரம் ரமணி..
9
மழை வலுத்தது. மலைப் பாதையில் மழையை — எதிர்த்து ஓடுவது சுலபமாக இல்லை.
அவர்களிடமிருந்து விலகி வெகு தூரம் போய் விட வேண்டும்.
அவர்கள் இந்தப் பக்க மாகத்தான் போயிருக்க வேண்டும். இதோ பார் சேற்றில், அந்தப் பெண்ணின் கால் அடையாளங்கள். அருகே நாயின் கால்தடங்கள்.
இனி என்னால் ஓட முடியாது, டைகர். எனக்குக் குளிர் நடுக்குகிறது. மூச்சு இரைக்கிறது...
போர்வையை எங்கே கொண்டு போகிறாய் டைகர்? என்னால் உன்னைத் தொடர்ந்து அங்கெல்லாம் ஏறி வர முடியாது.
ஓ!.. என் அருமை நண்பா. இப்போதுதான் உன் யோசனை எனக்குப் புரிகிறது. போர்வையை தூளியாக்கி விட்டாயே..!
அதே சமயம் அக் கொடியவர்கள் இருவரும் தூரத்தே வருகிறார்கள்.



மூன்றாவது மகன்

வெகு காலத்துக்கு முன்னாலே ஒரு மலையடிவாரத்தில் ஒரு குடியானவன் வாழ்ந்து வந்தான். மலைச் சரிவின் ஓரமாக அவனுக்குக் கொஞ்சம் நிலம் இருந்தது. அதில் சாகுபடி செய்து வாழ்க்கை நடத்தி வந்தான். அவனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். ஒரு சமயம் அவன் தன் நிலத்தில் பயிர் செய்திருந்தான். அறுவடை செய்ய வேண்டிய நிலையில் தானியங்கள் நன்கு முற்றி இருந்தன. மறுநாள் அறுவடைக்குத் தயாராகத் தன் பிள்ளைகளுடன் வயலுக்குப் போன குடியானவன் அதிர்ச்சி அடைந்தான். வயல் பாழாகிக் கிடந்தது. தானியங்களையே காணோம். அத்தனை தானியங்களும் நாசப்பட்டுக் கிடந்தன. அந்த வருஷம் குடியானவனுக்கு ஏதுமில்லை. அடுத்த இரண்டு வருஷங்களும் கூட இதே நிலைதான். தானியங்கள் முற்றி அறுவடைக்குத் தயாராக இருக்கும்போது கொள்ளை போயின. மூன்று பொங்கலாக அவன் வீட்டில் புது அரிசி வைத்துப் பொங்கவில்லை. இதனால் ரொம்பவும் மனமுடைந்து போன அவன் தன் பிள்ளைகளிடம் சொன்னான்: ''இந்தத் தடவை தானியங்கள் கதிர் வாங்கி முற்றியதும் உங்களில் ஒருவன் களத்து மேட்டில் போய் இரவு முழுதும் காவல் காத்து வாருங்கள். மூன்று ஆண்டுகளாகப் பயிர்களைப் பறிகொடுத்தது போல் இவ்வாண்டும் ஏமாறக் கூடாது'' என்றான்.

தகப்பனாரின் யோசனைப்படி மூத்த மகன் அந்த வருஷம் களத்து மேட்டில் காவலுக்குப் போனான். இன்னும் இரண்டொரு நாட்களில் அறுவடைக்குத் தயாராகிவிடும் நிலையில் பயிர்கள் செழித்திருந்தன. மலை அடிவாரத்தில் குடியானவனுடைய நிலத்தையும் வீட்டையும் தவிர வேறு வீடுகள் கிடையாது. கிராமம் ஒன்று பல மைல்கள் தள்ளி இருந்தது. மலையிலிருந்து ஓடி வந்த ஓர் அருவி பாசனத்துக்குப் பயன்பட்டது. நிலம் பரந்து கிடந்தது. கண்ணுக் கெட்டிய வரையில் ஒரே பசுமைதான்.


மூத்த மகன் சூரியன் மலை வாயிலில் விழும் போதே கழனிக்குப் போய்விட்டான் காவலுக்கு. கொஞ்ச நேரத்தில் இருள் போர்வையால் மூடிக் கொண்டன வயல்களெல்லாம். அதே மாதிரி காவல் காக்க வந்தவனுக்குத் தூக்கமும் வந்து அழுத்தியது இமைகளை. அயர்ந்து தூங்கிப் போனான் குடியானவனது குமாரன்.

நள்ளிரவு வேளை. திடீரென்று ஏதோ சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான். பூமியே நடுங்குவது போலிருந்தது. அவன் தங்கியிருந்த குடிசைச் சுவரெல்லாம் கலகலத்தன. பயங்கரமான கனைப்பும் தடதட வென்ற ஓசையும் எழுந்தன. காற்று புயலாக வீசியது. அவ்வளவுதான். குடியானவனின் மூத்த மகன் பீதியினால் உடல் நடுங்கத் தலைதெறிக்க வீட்டை நோக்கி ஓடலானான். மூர்ச்ச



வாங்க வீட்டுக்குள் வந்து பொத்தென்று விழுந்தவனுக்குப் பேசுவதற்கு வெகு நேரமாயிற்று. அந்த வருஷமும் குடியானவனின் வயல் சூறையாடப்பட்டது. அதே கவலையால்குடியானவனும் இறந்து போனான்.

அடுத்த வருஷம் எப்படியும் இந்த மர்மத்தைக் கண்டு பிடித்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான் இரண்டாவது மகன். அவன் அந்த ஆண்டு அண்ணனைப் போலவே காவலுக்குப் போனான். தூங்கவே கூடாது என்று உறுதியோடுதான் இருந்தான். ஆனால் எப்படியோ தூக்கம் அவனை மயங்க வைத்துவிட்டது. அதே கதைதான். நள்ளிரவில் ஒரே அதிர்ச்சி, இடி முழக்கம், புயல், கனைப்பொலி, 'ஓ' என்ற ஓலம். காவலுக்கு வந்த இரண்டாவது மகன் எடுத்தான் ஓட்டம். அவன் வாழ்நாளிலே அத்தனை வேகமாக ஓடியதே இல்லை. அந்த ஆண்டும் ஏமாற்றம், ஏக நஷ்டம்!




வாண்டுமாமா

மூன்றாவது மகனுடைய முறை வந்தது. அவன் பெயர் பொன்னன். பொன்னனைக் கண்டாலே அவன் அண்ணன்மார்களுக்குப் பிடிக்காது. சதா அவனைக் கேலி செய்து கொண்டிருப்பார்கள்.

''இந்த வருஷம் உன்னுடைய முறை போலிருக்கே பொன்னா. வீட்டில் தின்று விட்டுச் சும்மா உட்கார்ந்திருக்கும் நீ இந்தக் காரியத்தையாவது செய்.'' என்றான் சின்னண்ணன்.


''வீராதி வீரன் காவலுக்குக் கிளம்பி விட்டான்'' என்று கேலி செய்தான் பெரியண்ணன். ஆனால் பொன்னன் அவர்கள் வார்த்தைகளை லட்சியமே செய்ய வில்லை. அண்ணன்மார்கள் தங்கள் அனுபவங்களைக் கூறி இருந்ததினால் எச்சரிக்கையாக இருக்க உறுதி செய்து கொண்டான். களத்துமேட்டிலிருந்த காவல் குடிசையில் கொட்டக் கொட்ட விழித்தபடி உட்கார்ந்திருந்தான். நள்ளிரவாயிற்று. பொன்னன் தூங்கவில்லை. பேரிரைச்சல் ஏற்பட்டது. பூமி அதிர்ந்தது. ''இவ்வளவு தானே? இதற்கா பயப்படுவது?'' என்று அமைதியாக இருந்தான். இடி



இடிப்பதுபோல் தடதடவென்று பயங்கர ஓசை. குடிசைச் சுவர்கள் நடுங்கின. ''இதைவிட மோசமான சூழ்நிலை ஏற்பட்டாலும் சரி. இங்கிருந்து நகரக் கூடாது'' என்று உறுதியோடு இருந்தான் பொன்னன். பூகம்பமோ என்னும்படியான நடுக்கம். குடிசை மேலே விழுந்து விடும்போல இருந்தது. பேய்க் காற்று. ஆனால் பொன்னன் நிலை குலையவே இல்லை. சட்டென்று ஒரே அமைதி. 'மறுபடியும் புயல் பூகம்பம் ஏற்படுமோ?' என்று எண்ணினான். ஆனால் அதன் பிறகு எதுவுமே ஏற்படவில்லை. மெள்ள வெளியே வந்து எட்டிப் பார்த்தான் பொன்னன். குடிசைக்கு வெளியே வயலின் நடுவே கம்பீரமான குதிரை ஒன்று நின்றுகொண்டு தானியங்களைத் தின்று கொண்டிருந்தது. குதிரையோ கொள்ளை அழகு. வரப்பின் மீது அதற்கு அணிவிக்கவேண்டிய அலங்காரச் சேணங்கள் எல்லாம் பளபளவென்று வைக்கப்பட்டிருந்தன. அது மட்டுமல்ல; ஒரு போர்வீரன் அணியக் கூடிய கவசம், ஈட்டி, வாள் முகமூடி அத்தனையும்கூட அருகே இருந்தன. எல்லாம் பளபளக்கும் தங்கத்தில்.

''நீதானா இத்தனை வருஷங்களாக எங்கள் பயிர்களைத் தின்று நாசமாக்கி விட்டுப் போனது?'' என்று சொல்லியபடி தன்னிடமிருந்த ஒரு கயிற்றைச் சுருக்கிட்டு அதன் மீது வீசினான் பொன்னன். அது அதன் கழுத்தில் விழுந்ததும் இழுத்து இறுக்கினான். அதனால் அந்தக் கம்பீரமான குதிரை ஓட முடியவில்லை. அப்படியே மந்திரத்தால் கட்டுப்பட்டதைப் போல் நின்றது. பொன்னன் அதன் அருகே சென்று தடவிக்கொடுத்தான். பிறகு அதன் சேணம் முதலியவற்றையும், வீரனுக்குரிய கவசம் முதலிய உடைகளையும் எடுத்து அதன் முதுகின் மீது போட்டுக்கொண்டு குதிரையை நடத்திச் சென்றான். ரொம்பச் சாதுவாக அவன் விருப்பப்படியெல்லாம் நடந்து கொண்டது அந்தக் கம்பீரமான குதிரை.

பொன்னனின் அண்ணன்மார்கள் எண்ணியதைப் போல் அவன் அசடல்ல; சோம்பேறியும் அல்ல. மலையில் ஒரு



குகை இருக்குமிடம் அவனுக்குத் தெரியும். வேறு யாருக்கும் அது தெரியாது. பொன்னன் அந்தக் குதிரையை அங்கு கொண்டு போய்க் கட்டிவிட்டு வீடு திரும்பினான்.

நள்ளிரவில் நடுங்கியபடி ஓடி வருவதை எதிர்பார்த்திருந்த அவன் சகோதரர்களுக்குக் காலையில் அவன் காலாறச் சிரித்தபடி வீடு திரும்பியது வியப்பாக இருந்தது. ''என்னப்பா, பொன்னப்பா! நீ இரவு களத்துமேட்டுக்குப் போகவே இல்லை போலிருக்கு. அப்படித்தானே?'' என்று கேட்டார்கள்.


''இரவு முழுதும் களத்துமேட்டில் தான் இருந்தேன். நீங்கள் சொன்னது போல் எனக்கு எந்தச் சத்தமும் கேட்கவில்லை. பயப்படும்படியாக எதுவுமே நடக்கவில்லை'' என்றான் பொன்னன்.

''நீ பொய் சொல்லுகிறாய். கதை அளக்காதே! வயல்காட்டுக்குப் போய்ப் பார்த்தால் உண்மை தெரிந்துவிடுகிறது'' என்றபடி ஓடினார்கள். அவர்களுக்கு அங்கே ஆச்சரியம் காத்திருந்தது. பயிர்கள் பசேல் என்று தலையசைத்துச் சிரித்தபடி இவர்களை வரவேற்றன.

''இன்னும் அறுவடைக்கு ஏற்றதாக இல்லை. அதனால்தான் அந்த மர்ம நிகழ்ச்சி நடைபெறவில்லை. இன்றிரவு போய்ப் பார்'' என்றார்கள் அண்ணன்மார்கள். பொன்னன் மறுக்கவில்லை. அன்றிரவும் கழனிக்குக் காவலுக்குப் போனான். அன்றும் அதே கதைதான். பூகம்பம், புயல் எல்லாவற்றுக்கும் பிறகு அமைதி. அதே போல் இன்னொரு குதிரை தானியங்களை மேய்ந்தபடி நின்று கொண்டிருந்தது. வரப்பின் மீது அதேபோல் வீரனுக்குரிய அணிகள். எல்லாம் வெள்ளியினால் ஆனவை. பொன்னன் இந்தக் குதிரையையும் அதே குகைக்குக் கொண்டு போய்க் கட்டி வைத்துவிட்டு வீடு திரும்பினான்.


வயலுக்குப் போய்ப் பார்த்த மூத்த சகோதரர்களுக்கு மூச்சே நின்றுவிட்டது.

மூன்றாவது நாளும் அவன் காவலுக்குப் போக வேண்டும் என்று தூண்டினார்கள். பொன்னன் முகம் சுளிக்கவில்லை. போனான். அன்றும் ஒரு



குதிரை பரிசாகக் கிடைத்தது பொன்னனுக்கு. இந்தத் தடவை வீரனின் ஆடை அணிகள் இரும்பாலானவையாக இருந்தன. மூன்றாவது குதிரையையும் கொண்டு போய்க் குகையில் ஒளித்து வைத்துவிட்டு வீடு திரும்பினான் பொன்னன். இதற்குமேல் அவன் அண்ணன்மார்களால் அவனை அலட்சியப்படுத்த முடியவில்லை. அன்றைக்கே தானியங்களை அறுவடை செய்து வீட்டில் கொண்டு வந்து சேர்த்தார்கள் மூவரும்.

பொன்னன் வாழ்ந்த நாட்டின் அரசருக்கு ஒரு பெண். இளவரசிக்கு மஞ்சுளா என்று பெயர். அழகெல்லாம் ஒன்று சேர்ந்து உருவானதோர் அமைப்பாக விளங்கினாள் மஞ்சுளா. மன்னர் தம் மகளுக்கு ஏற்ற மணாளனைத் தேடிக் கொண்டிருந்தார். அதற்காக ஒரு போட்டியும் வைத்திருந்தார். தலைநகரை அடுத்து ஒரு மலை இருந்தது. அதைக் கண்ணாடி மலை என்றார்கள். அதன் பக்கங்கள் அப்படி வழுவழுப்பாக இருந்தன. அது மட்டுமல்ல, அதன் பக்கங்கள் செங்குத்தானவை. அதன் மீது யாராலும் ஏற முடியாது. அதன் உச்சியில் ஒரு மண்டபத்தை அமைத்திருந்தார் அரசர். இளவரசியின் பிறந்த நாளன்று அந்த மண்டபத்தில் அவள் போய் உட்காருவாள். அங்கு போவதற்கு விசேஷமான படிகள் உண்டு. அதன் வழியாக இளவரசியைத் தவிர வேறு யாரும் போகக் கூடாது. இளவரசியை மணக்க விரும்புபவர் யாரானாலும் குதிரையில் அந்தக் கண்ணாடி மலை மீது ஏறி அவள் கையில் உள்ள தங்க மாம்பழங்களைப் பெற்றுக்கொண்டு திரும்ப வேண்டும். அப்படி யார் அந்த மலை மீது ஏறித் திரும்புகிறார்களோ அவர்களுக்கு இளவரசி மஞ்சுளாவும் மன்னரின் ராஜ்யத்தில் பாதியும் பரிசாகக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருந்தார் மகாராஜா. மஞ்சுளாவின் அற்புத அழகைப் பற்றிக் கேள்விப்பட்ட அநேக அரச குமாரர்களும் பிரபுக்களின் புதல்வர்களும் வீர வாலிபர்களும் அவளை மனைவியாக அடைய மூன்று ஆண்டுகளாக முயன்று வருகிறார்கள். ஆனால் பலன் இல்லை. இந்த ஆண்டும் அ[illegible]ப் போட்டிக்கான ஏற்பாடுகள் து[illegible]மாகச் செய்யப்பட்டு வந்தன. பொ[illegible]னனின் சகோதரர்கள் இவ்வாண்டு [illegible] அறுவடை [illegible] தி[illegible]ந்ததினால் போட்டியி[illegible] முய[illegible] பார்க்க [illegible] உ[illegible]கள் [illegible] இர[illegible] ச[illegible] வந்து [illegible]



விசேஷப் பயிற்சியும் அளித்துக் கொண்டிருந்தனர். அண்ணன்மார்களின் எண்ணத்தை உணர்ந்த பொன்னன் தானும் தலைநகருக்கு வர விரும்புவதாகக் கூறினான். அதைக் கேட்ட அவர்கள் ஏளனமாக நகைத்தார்கள். ''நீ வீட்டைப் பார்த்துக் கொண்டு இங்கேயே இரு'' என்று கூறிவிட்டு அவ்விருவரும் குறித்த தினத்தன்று குதிரையின் மீது ஏறிப் போய் விட்டார்கள்.

கண்ணாடி மலையடிவாரத்தில் ஒரே கோலாகலம். பல தேசத்து இளவரசர்களும் இளைஞர்களும் வீரர்களும் குழுமி இருந்தனர். ஆனால் யாராலும் சில அடிகள் தூரம்கூட ஏற முடியவில்லை. நாலடி வைத்த குதிரைகள் வழுக்கிக் கீழே விழுந்து உருண்டன. இந்நிலையில் உச்சிக்குப் போவது எப்படி? இப்போட்டி மூன்று நாட்கள் நடைபெறும். மூன்று நாட்களும் முயற்சி செய்யலாம். முதல் நாள் மாலைக் கதிரவனின் பொன்னொளி பட்டுக் கவசங்கள் மின்ன ஒரு குதிரை வீரன் கம்பீரமாக வந்தான். அவன் கவசங்கள் தங்கத்தினால் ஆனவை. முகமூடியும் அணிமணிகளும் சொக்கத் தங்கம். குதிரையின் சேணம் கடிவாளங்கள் எல்லாமே தங்கம். கருஞ்சிவப்பு நிறக் குதிரை மீது கம்பீரமாக அமர்ந்திருந்தான் அவ்வீரன். அவன் குதிரையும் அற்புத எழிலுடன் தோன்றியது. குதிரையைத் தட்டிவிட்டான் அவன். அது கம்பீரமாகக் கனைத்துக் கொண்டு கண்ணாடி மலை மீது தாவி ஏறியது. என்ன ஆச்சரியம், அதன் கால் குளம்புகளில் என்ன சக்தி? வழுக்கவே இல்லையே! மேலே மேலே முன்னேறிப் போய்க் கொண்டிருக்கிறானே வீரன், மலையின் மூன்றில் ஒரு பங்கு தூரத்தைக் கடந்து விட்டான். மீதி தூரத்தையும் இதே முறையில் ஏறிவிடுவான். ஆனால் ஏனோ சட்டென்று அவன் தன் குதிரையைத் திருப்பிவிட்டான் கீழே இறங்குவதற்கு. மலை உச்சியின் மண்டபத்திலிருந்து வீரன் வருவதைக் கவனித்துக் கொண்டிருந்த இளவரசிக்கு அவன் திரும்பியது ஏமாற்றமாகி விட்டது. உடனே தன்னிடமிருந்த தங்க மாம்பழங்களில் ஒன்றைக் கீழே உருட்டி விட்டாள் அவனை நோக்கி. இறங்கும் வேகத்தில் அவன் [illegible]டியில் உருண்டு வந்த மா[illegible]பழத்தை அணிந்து எடுத்துக் [illegible]ண்டான் [illegible] ம[illegible]ன். [illegible]றந்த வா[illegible] [illegible] கோ[illegible] [illegible]ங்கி [illegible]

எங்கோ மறைந்துவிட்டான். அந்தளவு வேகமாகப் பறந்தது அவன் குதிரை.

அன்றிரவு பொன்னனின் சகோதரர்கள் ஓய்ந்து போய் வீடு திரும்பினார்கள். திரும்பியவர்கள் அன்று தலை நகரில் போட்டி மைதானத்தில் நடந்த அதிசயத்தைப் பற்றிப் பொன்னனிடம் விவரித்தார்கள்.

இரண்டாம் நாள் போட்டி விழாவுக்கு அவர்கள் கிளம்பியபோது பொன்னன் தானும் வருவதாகக் கெஞ்சினான். ஆனால் அவர்கள் அவனை ஏளனம் செய்து விட்டுப் போனார்கள்.

இரண்டாவது நாளும் இதே கதை தான். யாராலும் கொஞ்ச தூரம்கூட மலை மீது ஏற முடியாத நிலையில் மாலை மயங்கும்வேளையில் வெள்ளிக் கவசங்கள் அணிந்து வெள்ளைக் குதிரை மீதேறி வந்தான் ஒரு வீரன். நேற்று வந்த வீரனை எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமாக இருந்தாலும் இவனுடைய தோற்றமும் அழகும் எல்லாரையும் திகைக்க வைத்தன. வெள்ளைக் குதிரை வீரன் கண்ணாடி மலை மீது மூன்றில் இரண்டு பங்கு தூரம் ஏறியவன் ஏனோ சட்டென்று குதிரையைத் திருப்பிக் கொண்டு இறங்கலானான். இளவரசி இரண்டாவது மாம்பழத்தை மலைப் பாதையில் உருட்டிவிட்டாள். அதையும் கொத்தி எடுத்துக் கொண்டு வெள்ளிக் கவசம் அணிந்த வீரன் கீழிறங்கி மாயமாய் மறைந்துபோனான்.

மூன்றாவதும் கடைசியுமான நாளன்று அதே மாதிரிதான் நடந்தது. கெஞ்சு கெஞ்சென்று கெஞ்சிய தம்பி பொன்னனைத் தள்ளி விட்டுக் கிளம்பினார்கள், அண்ணன் இருவரும். போட்டி மைதானத்திலும் யாராலும் மலை மீது ஏற முடியவில்லை. அரசருக்கு ஒரே வேதனை, மஞ்சுளாவுக்கு ஏற்ற கணவன் கிடைக்காமலே போய் விடுவானோ என்று. முதல் நாள் வந்த தங்கக் கவச வீரனை இரண்டாம் நாள் காணவில்லை. இரண்டாம் நாள் வந்த வெள்ளிக் குதிரை வீரனாவது இன்று வந்து வெற்றி பெற வேண்டுமே என்று ஏங்கினார். ஆனால் விழா முடியும் தறுவாயில் வந்தான் ஒரு வீரன். அது வெள்ளைக் குதிரை வெள்ளி வீரனல்ல, கறுப்புக் குதிரை வீரன். இரும்புக் கவசம் அணிந்து இறுமாப்புடன் அலட்சியமாக வந்தான். ஒரே வீச்சில் கண்ணாடி மலை மீது தாவி ஏறியது அவனது கறுப்புக் குதிரை. மலை உச்சியை அடைந்த வீரன் இளவரசியின் மடியிலிருந்த மாம்பழத்தை எடுத்துக் கொண்டு ஏறிய வேகத்தைப் போலவே இறங்கியவன் எங்கும் நிற்காமல் போய் விட்டான்.



மன்னர் காத்திருந்தார். வெற்றி கண்ட [illegible] வரவே இல்லை.

''[illegible] நாட்களும் மூன்று [illegible] கண்[illegible] மலை [illegible] ஏறிய[illegible] கண்[illegible] பார்[illegible]கிறேன். [illegible] அவர்கள் [illegible]டி வராமல் இருக்கிறார்கள்? [illegible]யத்தில் உள்ள எல்லா[illegible] நாளைக்கு [illegible] முன்னே வர வேண்டும். தங்க மா[illegible]ழம் உள்ளவர் [illegible]விடம் காட்ட [illegible] வர[illegible] [illegible]ன்று [illegible] பிறப்பித்[illegible]

[illegible] ராஜ்ய[illegible] உ[illegible]வர்கள் எல்லாம் மன்னர் [illegible] வரிசையாக [illegible] போனார்கள். [illegible] மாம்பழ[illegible] கொண்டு [illegible] வந்[illegible]லை. கடைசியாக [illegible] வந்தார்கள் பொன்னனின் அண்ணன்மார் இருவரும். அவர்களிடம் அரசர் கேட்டார். ''இன்னும் யாராவது வராதவர்கள் இருக்கிறார்களா?'' என்று.


''ஒரே ஒருவன் இருக்கிறான். எங்களுக்கு ஒரு தம்பி உண்டு. ஆனால் அவன் இந்தப் போட்டிக்கு எந்த நாளிலும் வரவில்லை. அவனிடம் தங்க மாம்பழம் இருக்கச் சாத்தியமே இல்லை. தவிர அவன் ஓர் அசடு'' என்றார்கள்.

''அதனால் பரவாயில்லை. எல்லாரையும் போல் அவனும் வரட்டும் என் முன்னால்'' என்றார் மன்னர். வேறு வழியின்றிப் பொன்னனை அரண்மனைக்கு அனுப்பி வைத்தார்கள் அண்ணன்மார் இருவரும்.


பொன்னனைக் கண்ட மன்னர், ''உன்னிடம் தங்க மாம்பழம் இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''இருக்கிறது'' என்ற பொன்னன், ''இதோ ஒரு மாம்பழம், இரண்டாவது மூன்றாவது'' என்று மூன்று மாம்பழங்களையும் அரசர் கையில் கொடுத்தான். மன்னருக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. ''அப்படியானால் நீ.....'' என்றவரின் முன்னே பொன்னன் தன் சாயம் போன அழுக்கு ஆடையைக் களைந்தான். தகதகவென்று தங்கக் கவசம் அணிந்த வீரனாக ஒளி வீச நின்றான். ''மூன்று நாட்களும் வந்த குதிரை வீரன் நான்தான்'' என்றான்.

''என் அழகு மகளான மஞ்சுளாவுக்கு ஏற்ற கணவன் நீதான். இந்த ராஜ்யத்தில் பாதியை அடையும் தகுதியும் உனக்கு உண்டு'' என்றார் அரசர். அப்புறமென்ன? 'அசட்டுப் பயல்' என்று அலட்சியப்படுத்தின தம்பிப் பயல் நாடாளும் அரசனானதைக் கண்ட அண்ணன்மார்களுக்குப் பொறாமையாக இருந்தாலும் ஒருவிதத்தில் பெருமையாகவும் இருந்தது. பின் இருக்காதா?







ஓர் ஊரில் ஒரு குரங்காட்டி இருந்தான். அவன் பெயர் கோவிந்தன். அவனிடம் ஒரு குரங்கு இருந்தது. அவன் அதை 'ராமா, ராமா' என்று அழைப்பான்.

அந்தக் குரங்கு அவன் சொன்னபடி யெல்லாம் ஆடும். வேடிக்கை காட்டும். வித்தைகள் செய்யும். கரணம் அடிக்கும். மாமியார் வீட்டுக்குத் தண்ணீர் கொண்டு போகும். சமுத்திரத்தைத் தாண்டும்.

எல்லோரும் அதன்மீது இரக்கப்பட்டுப் பழம், கடலை, சோறு எல்லாம் கொடுப்பார்கள். வித்தை காட்டும்பொழுது, அதன் இடுப்பில் கட்டியிருக்கும் சங்கிலியைக் கையில் பிடித்திருப்பான் கோவிந்தன். யாராவது ராமா குரங்குக்கு ஏதாவது கொடுக்கிற போது அந்தச் சங்கிலியைச் 'சரசர'வென்று இழுத்துக் குரங்கைத் தன்னருகில் கொண்டு வந்து விடுவான். எல்லாவற்றையும் வாங்கி அதுவே சாப்பிட்டு விட்டால் என்ன செய்வது என்கிற பயம்தான் அதற்குக் காரணம். அவனை நம்பி அவன் மனைவியும் மக்களும் வேறு இருக்கிறார்களே!


ராமா குரங்கு


கே. வேங்கடராமன்

எல்லாவற்றையும் தானே வாங்கித் தோளில் தொங்கும் டால்டா டின்னில் போட்டுக் கொண்டு விடுவான் கோவிந்தன். ராமா குரங்கு அவனைப் பரிதாபமாகவும் இரக்கமாகவும் பார்க்கும். ஐயோ பாவம் என்றோ என்னமோ அதற்கும் ஆகாரம் கொடுப்பான் கோவிந்தன். பாதி வயிறுகூட நிரம்பாது ராமா குரங்குக்கு!

ஒரு நாள் ஒரு மரத்தில் கிளைக்குக் கிளை தாவியும், கிளை ஒன்றில் வாலைச் சுருட்டிக் கொண்டு தலைகீழாகத் தொங்கியபடி உற்சாகமாக ஊஞ்சலாடியும் மகிழ்ந்து கொண்டிருந்த தன் இனத்தைச் சேர்ந்த குரங்கு ஒன்றைப் பார்த்தது ராமா குரங்கு.

தானும் அதுபோல் சுதந்திரமாகவும் தன்னிஷ்டம் போல் ஓடியாடியும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் போலிருந்தது ராமா குரங்குக்கு. எத்தனை நாட்கள்







தான் சங்கிலியில் கட்டுண்டும், வித்தைகள் செய்து காட்டியும் அரை வயிறு சாப்பிட்டுக் கொண்டுமிருப்பது என்று தோன்றியது அதற்கு.

கோவிந்தன் அதை ஒரு நாள் குடிசை வாசலில் கட்டிப்போட்டுவிட்டு வேறு வேலை பார்த்துக் கொண்டிருக்கும்போது சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடி விட்டது ராமா குரங்கு. மரத்தில் தாவி ஏறிற்று. கிளைக்குக் கிளை அனாயாசமாகத் தாவிக் குதித்தது. கிளை ஒன்றில் வாலைச் சுருட்டிக் கொண்டு ஆனந்தமாக ஊஞ்சலாடிற்று. சுதந்திரம் அடைந்துவிட்டதில் அது ரொம்ப நேரம் இஷ்டம்போல் அங்குமிங்கும் ஓடியும் தாவியும் குதித்ததில் அதற்குப் பசி வந்து விட்டது, பாவம்!

எங்கே தனக்குத் தேவையான உணவு இருக்கிறது என்று பார்த்தது குரங்கு. அதன் பார்வையில் ஒரு வெற்றிலை பாக்குக் கடை பட்டது. பழுத்த வாழைப் பழங்கள் குலை குலையாகத் தொங்கின. அதைப் பார்த்ததும் ராமா குரங்கின் வாயில் நீர் ஊறிற்று.

அவ்வளவுதான்! அந்தக் கடைக்கு ஒரு தாவு தாவி வாழைப் பழத்தைப் பறித்தது குலையிலிருந்து.

கடைக்காரன் பார்த்து விட்டான். சும்மா இருப்பானா? தடியை எடுத்து அதன் தலைமீது ஓர் அடி அடித்தான். ராமா குரங்கின் தலையில் நன்றாக அடிபட்டு விட்டது! லேசாக இரத்தம் கூட வந்தது. வலியைப் பொறுக்க முடியாமல் கீச் கீச்சென்று கத்திக் கொண்டு ஓடியது சுதந்திரம் பெற்ற அந்தக் குரங்கு.

வழியில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அப்பொழுதுதான் பள்ளிக்கூடம் விட்டிருந்தது. வெளியில் வந்த குழந்தைகள் ராமா குரங்கைக் கண்டனர். 'குரங்கு குரங்கு' என்று கூவினதோடல்லாமல் கற்களைப் பொறுக்கிக் குரங்கின் மீது சரமாரியாக வீசினர். கூரான கற்கள் பட்டு ராமா குரங்கின் உடம்பெல்லாம் ரணம் உண்டாயிற்று. அது அவர்களின் கடும் தாக்குதலிலிருந்து காப்பாற்றிக் கொள்ள வெகு வேகமாக ஓடியது. தொலைவில் ஓர் ஆலமரம் தெரிந்தது. அதன் கிளைகளும் விழுதுகளும் அடர்த்தியாக வளர்ந்து ஆலமரம் இருண்டு காணப்பட்டது. தான் ஒளிந்துகொள்ள அந்த இடம் சிறந்தது என்று எண்ணிய ராமா குரங்கு வேகமாக ஓடி வந்து ஓர் ஆல விழுதைப் பிடித்துக் கொண்டு மரத்தின் மீது ஏறியது.

அங்கு ஏற்கனவே நிறையக் குரங்குகள் இருந்தன. அவை புதிதாக வந்த ராமா குரங்கைக் கண்டதும் கோபம் கொண்டன. அதைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ள விரும்பாமல் 'கொர் கொர்' என்று உறுமி அதன் மீது விழுந்து கடித்துப் பிறாண்டின.

வெற்றிலை பாக்குக் கடைக்காரனிடம் தடியால் பட்ட அடியும், குழந்தைகளிடம் கல்லால் பட்ட அடியும் போதாதென்று இப்பொழுது தன் இனத்தார்களாலேயே கடியும் பெற்றதும் ராமா குரங்குக்குப் பாதி உயிர் போய்விட்டது.

வாலைத் தூக்கிக் கொண்டு ஆல மரத்திலிருந்து தலை குப்புற விழுந்து உயிர் பிழைத்தால் போதும் என்று நாலுகால் பாய்ச்சலில் கோவிந்தனின் குடிசையை நோக்கி ஓடியது.

அதைக் காணாமல் அழுது கொண்டிருந்த கோவிந்தன் அதைக் கண்டதும் ஓடி வந்து, ''ராமா, ராமா'' என்றவாறு அதை இரு கைகளாலும் தூக்கிக் கொண்டான். அதன் உடம்பில் இரத்தக் காயத்தைப் பார்த்ததும் அவன் கண்கள் கண்ணீரைப் பெருக்கின. முழுசாக ஒரு வாழைப் பழத்தை அதற்குக் கொடுத்தான். ராமா குரங்குக்கு என்ன தோன்றியதோ, அந்தப் பழத்தை அழகாகத் தோல் உரித்துச் சரிபாதியை விண்டு கோவிந்தனுக்குக் கொடுத்தது!





பிகாசோ: உலகின் புகழ்மிக்க ஓவியர்


குழந்தை பேச ஆரம்பிக்கு முன் முதல் வார்த்தையாக அதன் வாயிலிருந்து உருவாகி வரும் சொல் 'அம்மா' தானே! ஆனால் ஒரு குழந்தை 'பிஸ் பிஸ்' என்றது. லாபிஸ் (Lapiz) என்றால் ஸ்பானிஷ் மொழியில் பென்சில் என்று பொருள். பேச்சு சரியாக வரு முன் ஸ்பானிஷ் குழந்தைகள் லாபிஸ் என்பதை 'பிஸ்' என்று சொல்லுவார்கள். முதல் சொல்லே 'பென்சில்' என்று கூறிய குழந்தை பிற்காலத்தில் எப்படி விளங்கி இருப்பான்? மிகப் பெரிய, உலகின் புகழ்மிக்க ஓவியனாக என்று சொல்லவும் வேண்டுமா? இம்மாத முதல் வாரத்தில் தமது தொண்ணூற்றோராவது வயதில் காலமான பாப்லோ பிகாசோதான் அந்தப் புகழ்பெற்ற சித்திரக்காரர்.

பாப்லோ பிகாசோ பிறந்தது 1881ம் ஆண்டில் ஸ்பெயின் தேசத்திலுள்ள மாலகா என்ற ஊரில். தாயாரின் பெயர் டோனா மரியா. தகப்பனார் ஜோ ரூஸ் ப்ளாஸ்கோ, ஓர் ஓவியர். தம் மகனுக்கு ஓவியத்தில் உள்ள ஈடுபாடு கண்டு தந்தைக்கு ரொம்பப் பெருமை. சித்திரம் வரையும் அவன் ஆர்வத்தை வளர்த்து அவனுக்கு எப்படி வரைவது வர்ணந் தீட்டுவது என்று கற்றுத் தருவதில் தம் நேரத்தையெல்லாம் செலவிட்டார். குழந்தை பிகாசோவின் திறமை கண்டு உறவினர்களும் நண்பர்களும் பிரமித்தே போனார்கள். ஒரே ஒரு தொடர் கோட்டில் மனிதனையோ, மிருகங்களையோ, பறவைகளையோ அப்படியே தத்ரூபமாக வரைந்து விடுவான் குழந்தை. அந்தக் கோட்டில் தொய்வோ பிசிரோ இருக்காது. வேகமும் கம்பீரமும் மிளிரும். தன் தோழர்களோடு விளையாடும் போது நடைபாதையில் சுண்ணாம்புக் கட்டியால் குதிரை, காளை போன்ற மிருகங்களின் படங்களை வரைந்து மகிழ்விப்பான். கையை எடுக்காமல் ஒரே கோட்டில் கோடு துண்டிக்கப்படாமல். அது மட்டுமல்ல. வாலிலிருந்து ஆரம்பிக்கச் சொன்னாலும், காலிலிருந்து ஆரம்பிக்கும்படி கேட்டாலும் அதன்படியே அப்படங்களை எந்தப் பாகத்திலிருந்தும் ஆரம்பித்து முடித்துவிடுவான். சித்திரம் வரைவதில் அத்தனை வேகம், ஆர்வம், திறமை அவனுக்கு.

தன் உடன் பிறந்தவர்களுடனும், உறவினர்களுடனும் பொழுது போக்கப் பிகாசோ ஒரு புதிய விளையாட்டைக் கண்டுபிடித்திருந்தான். ''உங்களுக்குச் சின்னக் குதிரை வேண்டுமா, நாய் வேண்டுமா? அல்லது பூனையா?'' என்று கேட்பான். அவர்கள் விரும்பிக் கேட்கும் பிராணியை உடனே தன்னிடமுள்ள கத்திரிக்கோலினால் காகிதத்தில் கன கச்சிதமாக வெட்டிச் சின்னஞ் சிறிய பிராணிகளை உருவாக்கிக்

பட விளக்கம் - மேலே :

1. பிகாசோவின் நவீனபாணி ஓவியம்
2. [illegible]



பிகாசோ

கொடுத்து விடுவான். அந்த வேளையில் அவனது பெரிய கருவிழிகள் எப்படிப் பளபளக்கும் தெரியுமா ?

பிகாசோ பள்ளிக்குச் செல்ல விரும்பவில்லை. படம் போடுவதையே விரும்பினான். தன் தகப்பனாரின் ஓவியக் கூடத்திலேயே பொழுதெல்லாம் பழியாகக் கிடப்பான். நீல வானில் உல்லாசமாகப் பறக்கும் புறாக்களை ஜன்னல் வழியே கண்டு அதை அப்படியே வரைந்துவிடுவான். தன் தங்கை லோலாவை எத்தனை தடவை வரைந்து தள்ளி இருப்பான். தகப்பனார் சித்திரம் வரையும்போது பார்த்துக் கொண்டே இருப்பதில் அவனுக்கு அலுப்பே ஏற்படாது. கரிக் கட்டி, சாக்கட்டி, வண்ணங்கள் ஆகியவைகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று அவன் தந்தை விளக்கும்போது கவனமாகக் கேட்டுக் கொள்வான்.

பிகாசோவுக்குப் பத்து வயதான போது அவர்கள் குடும்பத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. கோருனு என்ற ஊரில் அவன் தகப்பனாருக்கு ஓவிய போதகர் வேலை கிடைத்தது. தன் தகப்பனார் கற்பித்த பள்ளியிலேயே பிகாசோவும் ஒரு மாணவனாகத் தன்னைப் பதிவு செய்து கொண்டான். பிகாசோவின் தந்தை, பள்ளியில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றிய நேரம் போகப் பாக்கி வேளைகளில் சித்திரங்களைத் தீட்டி விற்று வந்தார். தாம் வரையும் சித்திரங்களைப் பூர்த்தி செய்யுமாறு பிகாசோவிடம் அவர் ஒப்படைப்பது வழக்கம்.


ஒரு நாள் அப்படி ஒரு படத்தைப் பூர்த்தி செய்யுமாறு கூறிவிட்டு உலாவச் சென்றார் தந்தை ஜோ. முடிக்க வேண்டிய படம் சில புறாக்களின் கூட்டம். உலாவச் சென்ற தந்தை திரும்பி வந்து படம் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதைக் கண்டார். அதன் முன்னால் அப்படியே சிலையாக நின்றார். தந்தையின் முகத்தையே ஆர்வம் பொங்கப் பார்த்துக் கொண்டு நின்றான் பிகாசோ. சின்னப் பையன், அடர்த்தியும் கறுப்புமான கேசம். உணர்ச்சி வசப்படும் போது அவன் கரிய பெரிய விழிகள் ஜ்வலிக்கும். இப்போதும் அது அப்படித்தான் பார்த்துக் கொண்டிருந்தது. ஓவியக் கூடத்தில் ஒரே அமைதி. வெகுநேரம் தந்தையிடமிருந்து எவ்வித வார்த்தையும் வெளி வரவில்லை. பிறகு மௌனமாகத் தாம் அமர்ந்து வேலை செய்யும் மேஜை அருகே சென்றார். அங்கிருந்த தூரிகைகள், வண்ணக் குப்பிகள், தட்டுக்கள் எல்லாவற்றையும் எடுத்து அவைகளை அடக்கம் செய்யும் பெட்டிக்குள் வைத்தார். இத்தனையும் மௌனமாக. தவிப்போடு நின்று கொண்டிருந்த தனயனிடம் அந்தப் பெட்டியை நீட்டினார் தந்தை.

''நம் குடும்பத்தில் இனி ஒரே ஒரு ஓவியர்தான் இருக்கலாம். நீ வரைந்துள்ள புறாக்கள் தத்ரூபமாக உள்ளன. ஒவ்வோர் இறகையும் எவ்வளவு துல்லியமாக வரைந்துள்ளாய் ! எங்கே புறாக்கள் பறந்துபோய்விடுமோ என்று பார்ப்பவரை மயங்க வைக்கும்படி இருக்கிறது நீ அவைகளை வரைந்திருப்பது ''

இங்கே : 1. ஸால்டிம் பாங்கில் ஒரு குடும்பம் - 'பாங்க் பீரியட்' ஓவியம் 2 பிகாசோவின் புகழ்பெற்ற ஆட்டுச் சிற்பம்.







இரண்டு பூனைகள் ஒரு கடையிலிருந்து ரொட்டி வாங்கிக் கொண்டு வந்தன. அதைச் சரி பாதியாகப் பிரித்துக்கொள்வதில் சண்டை வந்து விட்டது. ஒன்றோடொன்று விழுந்து பிறாண்டிக் கொண்டன. அப்போது ஒரு குரங்கு தராசுடன் வந்தது. ''நான் உங்களுக்கு ரொட்டியைச் சரிசமமாக எடைபோட்டுப் பிரித்துத் தருகிறேன்'' என்றது.

உடனே பூனைகள், ''வேண்டாம். வேண்டாம். ரொட்டி வாங்கும்போதே அதைப் பத்து 'ஸ்லைஸ்'களாகக் கடையில் அறுத்துக் கொடுத்தார்கள். மறந்தே போய் விட்டது எங்களுக்கு. ஆளுக்கு ஐந்தாக நாங்களே பிரித்துக் கொள்கிறோம். நீங்கள் போய் வரலாம் என்று 'டாடா' கூறி விட்டு நகர்ந்தன.

—கே. அருணாசலம்

என்று பாராட்டியபோது அவர் குரல் கம்மியது. கண்கள் பனித்தன. தம் மகனின் திறமையினால் ஏற்பட்ட மகிழ்ச்சி, கர்வம்தான் அந்தக் கண்ணீர். தம்மைவிடத் தம் மகன் திறமைசாலி என்பதை உணர்ந்த தந்தை தாம் சித்திரங்கள் வரைவதைக் கைவிட்டு விட்டுத் தம் மகனுக்கு ஓவியக் கலையை முறையாகப் போதிக்கலானார். குடும்பம் நடத்துவதற்காக மட்டுமே ஓவியப் பள்ளி ஆசிரியர் பதவி வகித்து வந்தார்.

பிகாசோவுக்குப் பதினாறு வயதானபோது குடும்பம் பார்ஸலோனா நகரத்துக்குக் குடிபெயர்ந்தது. அங்குள்ள அருங்கலைப் பள்ளியில் ஜோவுக்கு வேலை கிடைத்ததுதான் காரணம். அது பெரிய கடற்கரை நகரம். பிகாசோவுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி.

ஓவிய ஆசிரியரின் மகன் என்பதற்காகப் பிகாசோவுக்கு ஓவியப் படிப்பின் முதுநிலை வகுப்பில் சேருவதற்கு அனுமதி வழங்கினார்கள் பள்ளி நிர்வாகிகள். இதில் சேருவதற்கு ஒரு பரீட்சை உண்டு. ஒவ்வொரு மாணவனும் தன் படத்தை ஒரு மாத காலகெடுவுக்குள் வரைந்து கொண்டு வர வேண்டும் என்பது நிபந்தனை. ஆனால் பிகாசோவோ தன் படத்தை ஒரே நாளில் முடித்துக் கொடுத்துவிட்டான். வரைந்த படமோ அற்புதமாக இருந்தது. கேட்பானேன்? உடனே அவனை மேல் நிலைப் படிப்புக்கு ஏற்றுக்கொண்டு விட்டார்கள். தன் வாழ்நாள் முழுதும் பிகாசோ சித்திரம் வரைவதில் இதே வேகத்தைக் காண்பித்தார். அவருடைய மிகச் சிறந்த படைப்புக்கள் மிகக் குறுகிய காலத்தில் உருவாக்கப்பட்டவைதாம்.

ஸ்பெயின் தலைநகரான மாட்ரிட்டில் உள்ள ராயல் அகாதமியில் சித்திரக் கலை பயிலப் பதினாறாவது வயதில் சேர்ந்தார். ஆனால் திடீரென்று உடல் நிலை பாதிக்கப்பட்டதால் பள்ளியிலிருந்து விலகும்படியாயிற்று. ஒரு நண்பனின் கிராமத்து வீட்டில் கோடை நாட்களைக் கழிக்கலானார். நகரங்களிலேயே இது நாள் வரையில் வாழ்ந்து வந்த பிகாசோவுக்கு இப்போது வயல்வெளி, மலைகள், புதிய மனிதர்கள், மிருகங்களைக் காணும் வாய்ப்புக் கிட்டியது. அவ்வருஷம் பனிக் காலத்தில் பார்ஸலோனாவுக்குத் திரும்பிய பிகாசோ வாழ்க்கை நடத்தத் தாமும் படங்கள் வரைந்து விற்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். பார்க்கும் பொருளை எப்படி உன்னிப்பாகக் கவனித்து அதை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதைப் பிகாசோவுக்கு அவர் தந்தை கற்பித்திருந்தார். ஓவியனுக்கான இந்த முக்கியமானதும் முதலாவதுமான பாடத்தைப் பிகாசோ மிகக் கவனமாகக் கடைப்பிடித்து வந்தார். ஒரு பொருளைப் பார்த்தால் அதே மாதிரிப் பிரதி எடுத்துவிடுவார். இப்படிக் 'காப்பி' செய்வதைத் தவிரவும் தம் படங்களில் தாம் நினைப்பதையும் கொண்டு வர விரும்பினார் பிகாசோ.

ஓவியக் காட்சிகளில் பிகாசோவின் படங்களில் சிலவே விலை போயின. காரணம் வாங்குபவர் ஓவியரின் வயதைப் பார்த்துதான். சின்னப் பையன் வரைந்த படம் என்று தரம் பார்க்காமல் ஒதுங்கிப்போனார்கள். பிகாசோவுக்குப் பத்தொன்பது வயதானபோது பாரிஸ் சென்று வாலிப எழுத்தாளர், ஓவியர்களுடன் வாழ விரும்பினார். ஆனால் அங்கு வாழ்வதற்கு ஏராளப் பொருள் வேண்டுமே. அவரது படங்கள் அதிகமாகவும் அப்போது விலை போகவில்லை. ஆகவே, பல ஆண்டுகள் பார்ஸலோனாவுக்கும் பாரிஸுக்குமாக

அல்லாடிக் கொண்டிருந்தார். பசி, பட்டினி, குளிர் ஆகியவற்றால் வாழ்வில் நம்பிக்கை இழக்கலானார். ஆனாலும் சித்திரம் வரைவதை மட்டும் நிறுத்தவேயில்லை. வரைந்து வரைந்து தள்ளிக் கொண்டேயிருந்தார். கடற்கரை ஓரங்களிலும், உணவுச் சாலைகளிலும் அவர் கண்ட ஏழை எளிய மக்களை அவர்களின் பட்டினி, வறுமைகளை அப்படியே தமது மனத்தில் பதித்துக் கொள்ளுவார். பிறகு தமது சின்னஞ்சிறிய ஸ்டுடியோவுக்குப் போய் அவர்களை எந்தக் கோலத்தில் எப்படிப் பார்த்தாரோ, பார்க்கும் போது என்ன எண்ணினாரோ அதை அப்படியே திரைச்சீலையில் பதிப்பார். அவருடைய துன்பத்தை மட்டுமல்லாது அவர் கண்ட மக்களின் துன்பங்களையும் பிரதிபலிப்புனவாக விளங்கின இப்படங்கள்.

இருபத்துமூன்றாம் வயதில் பிகாசோ பாரிஸிலேயே நிலையாகத் தங்கலானார். பல வருடப் போராட்டங்களுக்குப்பிறகு இவருடைய ஓவியங்களை மக்கள் பாராட்டினார்கள். விரும்பி வாங்கலானார்கள். 'ஸால்டிம் பாங்கில் ஒரு குடும்பம்' என்ற படம் இக்கால கட்டத்தில் வரைந்ததுதான்.

பிகாசோ ஓவியர் மட்டுமல்ல, சிற்பியும் கூட.. வெண்கலம், சலவைக் கல், இரும்புத் துண்டு கம்பி ஆகியவைகளைக் கொண்டு ஏராளமான சிற்பங்களையும் வடித்திருக்கிறார். உலகம் முழுவதிலும் உள்ள அருங்கலைப் பொருட்காட்சிகளில் பிகாசோவின் ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. ஏராளமான ஓவியங்களை வரைந்து குவித்தவர் பிகாசோ. அவர் வரைந்த ஓவியங்களின் எண்ணிக்கை உத்தேசமாக 15,000 இருக்கலாம். அதே மாதிரி ஏராளமாகப் பொருள் குவித்தவரும் இந்த ஓவியர்தான். அவர் வரைந்த சித்திரங்கள், சிற்பங்கள், நவீன பாணி அமைப்புக்கள் ஆகியவைகள் எவ்வளவு என்பதை இன்னும் கணக்கெடுக்கவில்லை. அவருடைய வீட்டின் பாதாள அறையில் இன்னும் உலகம் காணாத ஓவியங்கள் பல, இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இரண்டு படங்கள் மட்டும் 19,50,000 டாலர்களுக்கு விலை போயிருக்கின்றன. தமது தொண்ணூறாவது வயது முடியவும் ஏதாவது வரைந்து கொண்டோ, உருவாக்கிக் கொண்டோ இருந்த அற்புதக் கலைஞர் பிகாசோ. தேகாரோக்கியம் மிக்கவர் பிகாசோ. நிறையச் சாப்பிடுவார். அதே மாதிரி உழைப்பாளியும் கூட.


பிகாசோவின் படம் என்றாலே நவீன பாணி, குழப்பமாகவும், புரியாததாகவும் இருக்கும் என்ற ஓர் அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் அவர் எல்லாரையும் போல் அற்புதமான அழகுடன் படங்களை வரைந்த போது அவரை யாரும் மதிக்கவில்லை. ஆனால் ஓவியத்தில் புதிய பாணியான 'க்யூபிஸம்' என்ற முறையைப் புகுத்தி நவீன உத்திகளைக் கையாண்ட போது தான் அவருக்குப் புகழ் ஏற்பட்டது. விந்தையான உலகம் இது. தங்களுக்குப் புரியாததைப் பாராட்டுவதுதான் மதிப்பு என்று கருதும் பைத்தியக்கார உலகம்.

—கிருஷ்ணவேணி

"ஜூ"விலிருந்து வந்த பிள்ளைகள்!

பல ஊர் பள்ளிப் பிள்ளைகள் தங்கியிருக்கும் ஹாஸ்டலின் வார்டன் என் நண்பர். ஒரு நாள் அவரைப் பார்க்கச் சென்றேன். நான் போனபோது பையன்கள் டைனிங் ஹாலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

''இவர்களெல்லாம் எந்தெந்த ஊர்?'' என்று வார்டனைக் கேட்டேன்.



அவர் சொன்னார்: ''எல்லோரும் 'ஜூ'விலிருந்து வந்தவர்கள்'' என்றார்.

எனக்குப் புரியவில்லை.

வார்டன் சிரித்துக் கொண்டே பையன்களைப் பார்த்து ''நீங்கள் எந்தெந்த ஊர் என்று இவரிடம் சொல்லுங்கள்'' என்றார். பிள்ளைகள் தங்கள் சொந்த ஊர்களைச் சொன்னார்கள் :

'சிங்க'ப்பெருமாள் கோவில், 'ஆனை' தாண்டவபுரம், 'கரடி'வாக்கம், 'நரி'க்குடி, 'பன்றி'மலை, 'புலி'வலம், 'ஆந்தை'க்குடி, 'கிளி'யூர், 'ஆடு'துறை, 'பசு'பதி கோவில், 'குருவி'க்குளம், வலங்கை 'மான்', 'தேனி', 'மயிலாப்பூர்', 'கொக்க'ரசன்பேட்டை.

பிறகுதான் புரிந்தது—வார்டன் 'ஜூ' என்று சொன்ன மர்மம். — ஜி. பாபு



TIMES WEEKLY is unabashedly proud of a brilliant issue which will appear on May 6.

This bumper, 32-page issue will be entirely devoted to some of the best short stories in the regional languages written in recent years. Selected out of the many hundreds submitted to us, all of them have been translated into English and will be illustrated by well-known artists.

As a pioneering effort to put the most exciting representative regional literature within the reach of you, you and you, TIMES WEEKLY of May 6 <u>must</u> be read.

BOOK YOUR COPY TODAY !

TIMES WEEKLY

தெரியுமா?

522. கிரிக்கெட் பந்தின் மேல் புறம் எந்தப் பொருளினால் மூடப்பட்டுள்ளது?

523. ஹாக்கி மைதானத்தின் வரையறுக்கப்பட்ட நீளம் எவ்வளவு?

524. காற்றிலிருந்து ஓர் உரம் தயாரிக்கப்படுகிறது. அதன் பெயர் என்ன?

525. காந்த சக்தியுடைய உலோகங்கள் என்னென்ன தெரியுமா?

526. கடல் மட்டத்தில் ஒலியின் வேகம் எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

527. கான்காலஜி (Conchology) என்பது (A) கிளிஞ்சல் ஆராய்ச்சி (B) பாடல்களின் தொகுப்பு (C) புராதன கிரேக்கக் கோயில். இம்மூன்றில் எது சரி?

528. டெர்ப்ஸி கோரியான் (Terpsichorean) என்றால் (A) நம் கண்ணின் ஒரு பகுதி. (B) நடனக் கலையில் ஒரு வகை. (C) ஒரு வாத்தியக் கருவி.

529. யூபோனியம் (Euphonium) (A) செவிடர்கள் உபயோகிக்கும் கருவி. (B) ஆழ்கடல் மீன். (C) சங்கீதக் கருவி. இதில் எது சரி?

530. அந்த அறிவுள்ள நாய் தனது எஜமானர் மாறு வேடமணிந்திருந்த போதிலும் அடையாளம் கண்டு கொண்டது. ஏனென்றால் அவர் சிகப்பு மேலங்கி அணிந்திருந்தார். இது சரியா தவறா?

531. எந்த நாட்டின் பழங்குடிகள் 'மாக்யார்ஸ்' (Magyars) என்றழைக்கப்படுகிறார்கள்?

532. பெருமூச்சு விடும் பாலம் (Bridge of Sighs) எங்குள்ளது?

533. இங்கிலாந்து, வேல்ஸ் இரண்டு ராஜ்யங்களிலும் உள்ள மொத்த ஜில்லாக்கள் எத்தனை?

534. இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் கிரிக்கெட் டெஸ்ட் பந்தயங்கள் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறதென்றுதெரியுமா?

535. சக்கா (chukka) என்ற பதம் எந்த விளையாட்டில் பயன்படுத்தப்படுகிறது?

536. கழுத்து எலும்பில் அதிக இணைப்புக்கள் மனிதனுக்கா ஒட்டைச் சிவிங்கிக்கா? எத்தனை?

537. உஷ்ணத்தின் ஸெண்டிகிரேட் அளவைப் பாரன்ஹீட் அளவாக மாற்ற என்ன செய்ய வேண்டும்?

538. பாரன்ஹீட்டை ஸெண்டிகிரேடாக்க என்ன செய்வாய்?

539. உலகம் ஒரு நாடக மேடை. ஆணும் பெண்ணும் அதில் நடிக்கும் நடிகர்கள். இது ஒரு புகழ்பெற்ற எழுத்தாளரின் வார்த்தைகள். அவர் யார்?

540. வர்ணங்கள் தீட்டப்பட்ட பாலைவனம் (Painted Desert) எங்குள்ளது?

541. மிகக் கடுமையான சீதளமுடையது ஆர்க்டிக்கா (வட துருவம்) அண்டார்க்டிக்கா? (தென் துருவம்)

542. மாவீரர் நெப்போலியன் பிரெஞ்சுக்காரரா?

543. பிரிட்டனின் முதல் தொழிற் கட்சிப் பிரதமர் யார்?

544. மிக நீளமான இறகுகளையுடைய கடற் பறவையின் பெயர் என்ன?

545. ஒரு மிருகம். அதன் கால் விரல்கள் தோலினால் இணைக்கப்பட்டிருக்கும். வாத்தின் அலகு உண்டு அதற்கு. அது முட்டையிடும். இந்த அதிசயப் பிராணியின் பெயர் தெரியுமா?

546. எறும்புகள் ஒன்றோடொன்று எப்படிப் பேசிக் கொள்ளுகின்றன?

547. மீடியார் (Meteor)க்கும் மீடியாரைட் (Meteorite)க்கும் உள்ள வேறுபாடு என்ன?

548. உலோகங்களில் மிக இலேசானது எது?

தெரியுமே!

விடைகள்: 522. தோலினால். 523. நூறு கெஜங்கள். 524. அம்மோனியம் நைட்ரேட். 525. கோபால்ட், நிக்கல், இரும்பு. 526. விநாடிக்குச் சுமாராக 1,100 அடிகள். 527. (A) கிளிஞ்சல் ஆராய்ச்சி. 528. (B) நடனக் கலையில் ஒரு வகை. 529. (C) சங்கீதக் கருவி. 530. தவறு. நாய்களுக்கு வண்ணங்களைத் தரம்பிரித்து இனம் காணும் சக்தி கிடையாது. 531. ஹங்கேரி நாட்டில். 532. வெனிஸ் நகரில். 533. ஐம்பத்திரண்டு. 534. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை. 535. போலோ ஆட்டத்தில். 536. இருவருக்குமே ஒரே எண்ணிக்கையான இணைப்புக்கள்தான். ஏழு. 537. ஸெண்டிகிரேட் அளவை ஒன்பதால் பெருக்கி வரும் விடையை ஐந்தால் வகுத்து, அத்துடன் 22ஐக் கூட்டவேண்டும். 538. பாரன்ஹீட் அளவிலிருந்து 32ஐக் கழித்து மீதியை 5ஆல் பெருக்கிவரும் விடையை ஒன்பதால் வகுப்பேன் 539. வில்லியம் ஷேக்ஸ்பியர். 540. அமெரிக்காவில் உள்ள அரிசோனாவில். 541. தென் துருவம்தான். 542. இல்லை. இத்தாலியர். அவர் பிறந்தது கார்ஸிகாவில். 543. ராம்சே மாக்டனால்டு. 544. ஆல்பட்ராஸ். 545. பிளாட்டிபஸ். 546. தலைக்கு முன்னால் உள்ள ஆண்டெனா என்ற ஸ்பரிசக் கருவியின் மூலமாக. 547. மீடியார் என்பது விண்வெளியில் பயணம் செய்யும் சிறு பொருள் - அது பூமியை அடையுமுன் எரிந்துவிடும். (எரி நட்சத்திரம்) மீடியாரைட் என்பது விண்வெளியிலிருந்து பூமியில் வந்து விழும் பெரிய வஸ்து. (எரி நட்சத்திரக் கல்). 548. லித்தியம் (Lithium).

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: [illegible]

சந்தா விவரம்: ஒரு வருடம் ரூ. 7-00 ● ஆறு மாதம் ரூ. 3-50 ● வெளிநாடுகள் ரூ. 18-00




ருசியானவை... அருமையானவை... பிரமாதமானவை.
30 பைசாதான்!
PARLE
POPPINS
MIXED FRUITY SWEETS
30 Paise
புதிய
பார்லே
பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்
எலுமிச்சை, ஆரஞ்சு, சாத்துக்குடி, அன்னாசி மற்றும்
ராஸ்ப்பெர்ரி ஆகிய ஐந்து பழரசச் சுவைகளில்
ருசிமிக்க 13 மிட்டாய்கள்—குறைந்த விலைகொண்ட
கையடக்கமான பேக் ஒவ்வொன்றிலும்!
பாப்பின்ஸ் சுவையுங்கள்— பழரசச் சுவையை அனுபவியுங்கள்
everest/551d/PP tm